திராவிடநாடு

நாடு குமுறுகிறது....!

— இந்தியன் எக்ஸ்பிரஸ்

— ஆனந்த விகடன்

— கதிர்

எதிர்காலம் என்ன ஆகுமோ!!

ஒரு பக்கம் கைத்தறி வார விழாவில் கலந்துகொண்ட தலைவர்கள், அரசாங்கக்கூட்டுறவு இலாகா அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லோரும் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு கடந்த மூன்றரை ஆண்டுகளில் செலவிட்ட சுமார் 151 கோடி ரூபாயின் மானிய, கடன் உதவிகள் குறித்து சாங்கோபாங்கமாக புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டி திருப்திப்பட்டுக் கொண்டனர். சில பெருந் தலைகள், நெசவாளர்கள் தங்கள் தொழிலை நாணயமாக நடத்த வேண்டுமென்றும், அரசாங்க உதவியை என்றும் எதிர்பார்த்து இருக்கக்கூடாதென்றும் எச்சரித்தனர்—புத்திமதி கூறினர்!

அதேகாலத்தில் மறுபக்கம் பரமக்குடி, எமனேஸ்வரம், காஞ்சீபுரம், உறையூர், துறையூர், கரூர் மற்றும் பல இடங்களிலும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் துணித் தேக்கத்தின் பலனாகக் கிடைத்துள்ள கூலி குறைப்புப் பரிசை எதிர்த்து ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம், மறியல் போன்ற சாத்வீக எல்லைக்குள் அடங்கிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். இவர்களை எந்த 'செஸ்' உதவியாலும் பாதுகாக்க ஒரு ஏற்பாடும் இல்லாத—திட்டமற்ற கொள்கையில்லாத அவல நிலையையே காண முடிந்தது.

உற்பத்தி செய்த கைத்தறித் துணி விற்கவில்லை; தொடர்ந்து நெசவாளிக்கு வேலைதர முடியவில்லை; பஞ்சைக் கூலி பெற்று பட்டினி வாழ்வு நடத்த நெசவாளியின் உடலில் உள்ள உயிர் மறுக்கிறது. இந்த நேரத்தில்—அதுவும் கைத்தறி வாரத்தில் கலந்துகொண்ட எந்தப் பெருந் தலைகளும் இவர்களுக்கும் உதவ வேண்டுமெனக் கூறவில்லை. அதற்குப் பதில் பரவலாக சில இடங்களில் இன்றுள்ள கைத்தறிகளை ஒழித்துவிட்டு படிப்படியாக விசைத்தறிகளைக் கொண்டுவரவேண்டுமென்று மட்டும் பஜனை பாடியுள்ளனர்.

யதார்த்தமான தொழில் நிலைமையைப் புரிந்துகொள்ள சிறிதும் முயற்சிக்காது, ஜவுளித் தொழில் துறை பற்றி தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என எண்ணிக்கொண்டு 'விசைத்தறி வேண்டும்' என வெண்பா பாடியுள்ளனர். இந்த தொழில் மிதவாதிகளைக்கண்டு அழுவதா அல்லது சிரிப்பதா எனத் தெரியவில்லை. தறிக்காரனின் இன்றைய நிலையை யெண்ணி உருகி உருகிக் கண்ணீர் வடிக்கிறார்களாம்; அவனது வாழ்வு வளமாக—வருவாய் உயரத்தான் விசைத்தறி வேண்டுமெனக் கோருகிறார்களாம்! வேடிக்கையிலும் வேடிக்கை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுபெறும் காலத்தில் நாட்டில் ஜனத்தொகை பெருகி தலைக்கு 18 கெஜம் துணி வாங்கும் செல்வச் சீமான்களாக நாட்டு மக்கள் ஆகிவிடுவார்கள் என மனக்கோட்டை கட்டிக்கொண்டு — தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு உபரியாகத் தேவைப்படும் துணியை கைத்தறிகளால் பூர்த்திசெய்ய முடியாதாம்; அதனால்தான் விசைத்தறி புகுத்தலை விரும்புகின்றனராம். இப்படியாகக் காரணங்களை அள்ளி வீசிக் கொண்டே போகின்றனர்.

இந்த பெருந் தலைகள் கூறுவதற்கு மறுப்புக் கூறுவோர் நெசவாளர்களின் நல்வாழ்வுக்குத் தடையாய் இருப்பவர்களென்றும், தறித் தொழிலை பற்றி ஒன்றுமறியாதவர்களென்றும் ஊடைக்கும் பாவுக்கும் வித்யாசம் தெரியாத இந்தக்கூட்டம் உளறிக்கொட்டுகிறது. இதை இந்த ஆண்டுக் கைத்தறி வாரத்திலும் பார்க்க முடிந்தது.

விசைத் தறித் திணிப்பை எதிர்த்து வீராப்புப் பேசிய அதிகார சார்பற்ற அகில இந்திய கைத்தறி போர்டு மெம்பர்கள், இந்த ஆண்டில் 5 ராஜ்யங்களில் 6 ஆயிரத்திற்கும் அதிகமான விசைத் தறிகள் புகுத்தப்படுவதைப் பார்த்தும் பார்க்காத 'பத்தினிகள்' போல் பவனி வருகின்றனர். பதவி கிடைத்தால் போதும்; தொழிலைப் பற்றி அக்கரையில்லையென எண்ணியிருக்கின்றனர் போலும். காலம் பாடம் கற்பிக்கும் என்பதை மறந்துவிட்டனர் இவர்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

இவைகளைக் குறிப்பிடுவதன் மூலம் நாம் தொழில் வளர்ச்சிக்கு நாட்டில் தடைவிதிக்க வேண்டுமென விரும்புவதாக எண்ண வேண்டாம். 'சுவரில்லாமல் சித்திரம் எழுத முடியும்' என்பவர்கள்தான் நம் வாதத்தைத் தவறாகப் புரிந்துகொள்வார்கள். 28 லட்சம் கைத்தறிக் குடும்பங்களில் 20 லட்சம் குடும்பங்களைப் பரதேசிகளாக்கிவிட்டு வருகிற தொழில் வளர்ச்சியை நாம் கடைசி மூச்சு உள்ள வரை நெசவாளரின் பக்கபலத்தோடு எதிர்த்தேவருவோம்.

இன்றுள்ள ஜவுளி உற்பத்தித் துறைகளின் பல்வேறு பிரிவுகளிலுமாக உற்பத்தியாகும் துணியே விலை போகாமல் ஆலைகளிலும், வர்த்தகர்களிடமும் ஏராளமாகத் தேங்கியிருக்கும்போது—மக்கள் இவைகளை வாங்கக் கூடிய சக்தியைப் பெறாதபோது மேலும் அதிகத்துணி உற்பத்தி தேவையெனப் பேசுவது அர்த்தமற்றதாகப் படவில்லை போலும். தவிர இன்னும் பார்க்கப் போனால் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள மத்ய அரசாங்க பட்ஜெட்டின் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி மேலும் தேய்ந்து போகலாமென்றே தோன்றுகிறது.

மனிதன் தன் அன்றாட வாழ்க்கைத் தேவையைச் சரிக்கட்ட வருமானம் என்கிற இனத்தோடு மல்லுக்கு நின்றுகொண்டிருக்கிறான். இந்த நிலையில் அவனது வருமானத்தின் ஒரு பகுதி மறைமுகமாக அகவிலை உயர்வால் குறைந்து போகிறது. அப்படியிருக்கும் போது அதிகத் துணி வாங்க மக்கள் தயாராகி விடுவர் என்று சொல்வது அறிவுக்கு ஏற்றதாக நமக்குப் படவில்லை.

எனவே கைத்தறித் தொழிலின் ஒட்டுமொத்த நன்மைகளை மனதில் கொண்டு ராஜ்யத்தில் உள்ள கைத்தறியாளர்கள் பலங்கொண்ட ஸ்தாபன அமைப்பிற்கு வழி வகுத்துக் கொண்டாலன்றி எதிர்காலத்திலும் இப்போதும் இத்தொழிலை அழித்தொழிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுக்க முடியாது என்பதை உணரவேண்டும்.

★

அடுத்த ஆண்டுக்கு 'அம்பர் சர்க்கா'வுக்காக பத்து கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார், வரி மந்திரி கிருஷ்ணமாச்சாரியார்! நெசவாளர் நிலைபற்றி, கவிப் பெய்துகின்றனர்—காங்கிரஸ் தலைவர்கள். ஆனல், 'கைத்தறி' கருதுவது என்ன? என்பதை, 'கைத்தறி ஏடு' தருகிறது.

தூத்துக்குடியும்-மதுரையும்

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 8 [2-6-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 46

ஏனோ, இந்நிலை? — என்று நம் இதயம் குமுறுகிற அளவுக்கு தூத்துக்குடியும் மதுரையும் ஆளாகியுள்ளன! நமது கழகக்கருத்துக்கள் வலிவும் பொலிவும் பெற்று வரும் இடங்களாகும் இந்த நகர்கள்! தூத்துக்குடியிலே, நமது நெஞ்சமெலாம் கலங்க, கே. வி. கே. சாமியை அரசியல் வெறி கொண்டு சென்றது. அந்தத் துக்கம் மறைவதற்குள் தோழர் தாளமுத்து இப்போது பலியாகியிருக்கிறார், பட்டப்பகலில். வீதியில் வெட்டுண்டு மாண்டிருக்கிறார் இக்கழக வீரர்! கொடுவாள் கொண்டு கொடியோர் அவரைத் தாக்கிய பதினைந்து நிமிடத்துக்கெல்லாம் கழகத்தின் முன்னாள் தோழர் இரத்தினமும் வெட்டப்பட்டு சாகடிக்கப்பட்டிருக்கிறார். ஏழு வெட்டுகள் — என்கிறது இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு! தாளமுத்துவும், இரத்தினமும் ஏழு வெட்டுகளால் இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டனர்! கழகத் தோழரான டெய்லர் ராஜு என்பாரும், தாக்கப்பட்டுக் கிடக்கிறார், மருத்துவ நிலையத்தில். ஓடியிராவிடில், அவரும் தாளமுத்துவாகியிருப்பார். பரமசிவம் எனும் ஒரு படக்கடைக்காரர், அருணாசலம் என்ற ஆலைத் தொழிலாளி, சவரிமுத்து எனும் ஒரு பீடி வியாபாரி ஆகியோரும் அதே தினத்தில்; அரிவாளாலும் கடப்பாறையாலும் தாக்கப்பட்டிருக்கின்றனர். தாளமுத்துவைக் கொல்ல, முன்போர் முயற்சி நடைபெற்றதாகவும், அது இயலாததால் இரண்டாவது தடவையாக இக்கொடுமை நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது! தோழர் தாளமுத்து, கழகத்தின்பால் ஆர்வமும் அன்பும் கொண்டவர் மட்டுமல்ல, தொழிற் சங்கங்களிலும் ஈடுபாடு கொண்டு அவர் தம் அன்பினைப் பெற்ற அருந்தோழர்! அவரது மறைவு கேட்டு, அதிலும் கொடியோர்களின் அரிவாளுக்கு இரையான செய்தி கேட்டு, மனந் திடுக்கிட்டோம் — "இதுவோ, அரசியலில் ஆட்பட்டோருக்கு, மாற்று மனம் கொண்டோர் வழங்கும் பரிசு!" எனக் கலங்குகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய நாள் முதல், அதன் வளர்ச்சி கண்டு பொறாதோர், என்னென்ன வெறிச் செயல்களில் ஈடுபட்டனர், என்பதை நாடு அறியும். 'தேனி' நடந்தது—சென்னையில் பாண்டியன் வீழ்த்தப்பட்டார், — நெல்லிக்குப்பத்தில் மஜீத் குத்திக் கொல்லப்பட்டார்,—பிறகு சாமி—இப்போது இந்தப் பயங்கரம்! அதுவும் அதே ஊரில்!

பொது வாழ்வில், கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடும். அவைகளினூடே மலர்வதுதான், ஜனநாயகம்! இந்தக் கருத்து வேற்றுமைகளுக்காக, கத்தி எடுப்பதும், அரிவாள் தூக்குவதும், அடிதடிகள் நடாத்துவதும்காட்டுமிராண்டித்தனம் என்பதே நாம் வலியுறுத்தி வரும் கருத்தாகும். காட்டில் புலியும் சிங்கமும் ஒன்றையொன்று பாய்ந்து பிடுங்கியும் சண்டை போட்டுக்கொள்ளலாம்—ஏனெனில் அவை மிருகங்கள்! ஆனால், ஆறறிவு படைத்த மனிதன், அதிலும் மக்களுக்காகப் பாடுபடுவதற்காக அரசியல் உலகில் எடுத்தடி வைத்தவன், இவ்வாறெல்லாம் வெறிச் செயலுக்கு ஈடுபடக் கூடாது, அது எங்கிருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டும் என்பதே நமது கருத்தாகும். இதனாலேயே, கடமை—கட்டுப்பாடு—கண்ணியம் எனும் மூன்று சொற்களையும் மூல மந்திரம் ஆக்கிக்கொண்டுலவுகிறார்கள், நம் மருந்தோழர்கள்! இந்நிலையில், 'தூத்துக்குடி' தொடர்ந்து நடப்பதும், துடிதுடித்துப் பலர் பட்டப்பகலில் வெட்டிச் சாய்க்கப்படுவதுமான நிகழ்ச்சிகள், நடைபெறுகிறதென்றால், மாண்டு போனவர்களுக்காக மட்டுமல்ல, அவர்கள் தம்

உயிரைப்போக்கிய கொடுங்கோலர்கள் உள்ளனரே, அவர்களுக்காகவும் கண்ணீர் வடிக்கிறோம்—ஐயகோ, அரசியல் அவர்களுக்கு அளித்த பாடம் இதுதானா! புத்திக்குப் பதில் கத்திதானா கிடைத்தது, வெல்ல! மனித உலகம், நாகரீகம் பெற்று வருகிறது என்று கூறுகிறார்களே! உண்மைதானா அது? புத்தரின் அன்பு நெறியையும், இயேசுவின் பணிந்து போகும் குணத்தையும், பூரணமாக்கிக்கொண்டு உலவும் எமது கழகத்தவருக்கு இதுதானோ பரிசு!!

பகுத்தறிவுப் பாசறை, என்றோர் படிப்பகம் மதுரைமாநகர் திராவிட முன்னேற்றக்கழகச் சார்பில் நடந்து வருகிறது. அதற்குள் புகுந்து, அரிவாள் தாங்கி, ஒன்பது பேரை. வெட்டியிருக்கிறார்கள்! காயமுற்றோரில் மூவர் நிலை, நெருக்கடியாயிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. சொந்தக் காரணங்களால் அல்ல, அரசியல் மாச்சரியம் காரணமாகவே, இதுவும் நடத்தப்பட்டிருக்கிறது.

கண்ணியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று யாரை நாடு கருதுகிறதோ, அவர்கள், அமர்ந்து படித்துக் கொண்டிருந்தபோது, 'சதக், சதக்' என்று பாய்ந்து வெட்டியிருக்கின்றது, அரிவாள். அறிவு அரசோச்ச வேண்டிய கூடம்! பெயரைக் கண்டாவது புத்தொளி பெற்றிருக்க வேண்டும்! ஆனால், பொறாமைக் கண்களுக்கு, எதுதான் தெரிகிறது? மனிதப் பண்பே மறந்துவிடுகிறதே! இந்தச் சம்பவத்துக்கும் எமது கட்சிக்கும் தொடர்பு கிடையாது என்று கம்யூனிஸ்டுகள் நகரில் துண்டுத் தாட்கள் வழங்கினராம். இது, உண்மையாயின் மகிழ்கிறோம்! இந்த உத்தமக் குணம் வளர்ந்தால், மாற்றுக் கட்சிகளிடம் மலர்ந்தால், நாடு காடாகும் இந்தக் கொடுஞ் செயல்கள் ஒருபோதும் ஏற்படா!

மக்கள் மன்றம் உளது—அங்கே கொள்கைகளைக் கூறுவோம்—அதன் தீர்ப்புக்கு அரசியல் கட்சிகள் அடிபணிய வேண்டுமே ஒழிய, இப்படி அரிவாளையும் கத்தியையும் நம்பினால், நல்லதல்ல; புது வாழ்வு காணும் முறையுமல்ல; மக்கள் தொண்டுமல்ல.

இந்த இரு நகர்களிலும் நிகழ்ந்த இந்தச் சம்பவங்கள், உண்மையில் நமது மனதை உலுக்குகின்றன. அரசியல் வாழ்வு, அறிவையும் அன்பையும் துணைக்கொண்டு நடக்க வேண்டும் என்கிற ஆசை கொண்டவர்கள் நாம்! அரிவாளுக்கும் கடப்பாறைக்கும் அங்கே மதிப்பளிக்கப்படுகிறது என்று அறியும்போது, உண்மையில் பதைக்கிறோம். அட்டகாசக்காரர்களுக்கு ஒரு சாமியை இழந்தோம், இப்போது அதே ஊரில் ஒரு தாளமுத்து! ஐயகோ, என்ன கொடுமை—என்ன கொடுமை!

இரண்டு சம்பவங்களிலும், பாதிக்கப் பட்டோர்களாயிருப்போர், நம்முடைய சகோதரர்கள்தான். அவர்களுடைய குடும்பத்தினருக்கு, எவ்விதம் ஆறுதல் கூறுவோம்! எப்படி தேறுதல் மொழி கூற இயலும்? கொடுமைகள், கொஞ்சமல்லவே! எனினும், வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, வழக்கம்போல அமைதியும், கண்ணியமும் வழிந்தோடட்டும் உள்ளத்தில், என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். இரண்டும்தான் வெல்லும், அரிவாளும் கத்தியுமல்ல! மாண்ட வீரர்களின் சமாதிகள் மீது, எல்லா அரசியல் கட்சிகளும் இந்த உறுதி மொழியை எடுத்துக் கொண்டால்நல்லது. எண்ணம் வருமா! பொறாமைத் தீ இடங் கொடுக்குமா!!

இது நீதியா?

—[அ.ச. பாலு]—

பண்டித ஜவகர்லால் நேருவே—நாட்டின்
பரிதாப நிலை தன்னைப் பாருமே
கண்ட வரிகள் தொண்ணூறுமே—மக்கள்
கண்முன்னே பாம்பாகிச் சீறுதே!

உணவுப் பொருள்களும் வரியினால்—விலை
உயர்ந்துகொண்டே நாளும் பெருகுதே
மனதுக்குச் சரியென்று தெரியுதா—இது
மக்களின் வாழ்வுக்கே உரியதா?

கஞ்சிக்கு இல்லாதோர் தொகையுமே—உமது
கண்ணுக்குப் புரியாத மகிமையேன்?
பஞ்சத்தில் அடிபட்ட மக்களா?—இன்று
பலகோடி வரிதரத் தக்கவர்?

ஐந்தாண்டுத் திட்டத்தை நீட்டியே—பல
ஆகாசக் கோட்டையைக் காட்டியே
நைந்துள்ள மக்களின் மீதிலே—ஏறி
நர்த்தனம் ஆடுதல் நீதியா? (பண்)

காலமெனும் பாதையிலே!

"மலரின் மணம் சுமந்து வரும் காலைக் காற்றே! உன்னால், அவர்களை எழுப்பிட முடியுமா? கதிரவனை வரவேற்றுக் கூவிடும் சேவலே அவர்களை எழும்பச் செய்ய இயலுமா, உன்னால்! வீட்டிலிருக்கும் கத கதப்பு அளிக்கும் அடுப்புகள் இனி அவர்களுக்குத் தேவையோ? அவர் வந்துவிடுவாரே என்று இல்லக் கிழத்திகள் ஆடிஓடி பணிகளைச் செய்வரே, இனி தேவையோ அந்த அவசரம்? அப்பா வந்துவிட்டார் என்று ஆசையோடு ஓடிக் கூறுவார்களே குழந்தைகள்! இப்போது முடியுமா? ஆனந்தத்தோடு தந்தையரின் மடியேறி விலைமதிக்கவொண்ணாமுத்தங்களைப் பெறத் தாவுவரே, இயலுமோ இனி! அடிக்கடி அரிவாள்கொண்டு அவர்கள் கழனியில் இறங்கி அறுவடை செய்யும் காட்சியைக் காணவாபோகிறோம்! ஏர் கொண்டு கல்லையும் மேட்டையும் நெல் விளையும் நிலமாக்குவரே, எங்கே அந்தக் காட்சி இனி? மாடுகளை ஓட்டிக்கொண்டு எவ்வளவு மகிழ்ச்சியோடு ஒவ்வோர் நாளும் கிளம்புவர் வயலுக்கு! ஏது, இனி? கோடரி கொண்டு வெட்டிப் பிளந்து தமது காலடியில் வீழுமாறு செய்வரே மரங்களை—எங்கே காணமுடியும் அதனை இனிமேல்!!"

*

எங்கும், அமைதி. ஆடுகளின் கழுத்திலே கட்டப்பட்ட மணிகள், இங்குமங்கும் அசைவதால் எழும் ஓசை, எங்கிருந்தோ கேட்கிறது! முளைத்தெழுந்த நிலவிடம், தன் அமைதி குலைக்கப்படுவதாக ஆந்தையொன்று முறையிடுகிறது! ஊரடங்கு மணியும் ஒலித்துவிட்டது. களைத்துப்போய்ச் சாய்ந்துவிட்டான் கதிரவன். எங்கும் இரவின் ஆட்சி. இயற்கையன்னையின் எழிலாரம் போல் விளங்கும் அந்தக் கிராமத்திலே, தன்னந்தனியாக நிற்கிறான் அவன்! ஆசைகளை எழுப்பிடும், இரவு. தென்றல் வேறு, வந்து வந்து மோதுகிறது. அவனது எண்ணங்கள் சிறகடித்துக் கொண்டு பறக்கின்றன. ஒய்யாரமான மாளிகை, அங்கு ஊர்வசியோ—இவள் மேனகையோ—இல்லை ரம்பைதானோ என்று நிற்கும் மாதர்கள், அவர்தம் கரத்திலே மனதை மயக்கும் மது, அழகான கட்டில், அதன்மீது மோகலாகிரி கொள்ளச் செய்திடும் மலர்க் குவியல், அங்கே 'மன்மத பாணம்' துளைக்கப்பட்டவளாக ஒரு மான், அவளருகே நான்!!—இப்படி, ஓடவில்லை, அவனது எண்ணங்கள். சுடுகாட்டை நோக்கி ஓடின! அங்கே, சமாதியாகிப்போய்க்கிடக்கும், மனித உருவங்களைப் பற்றி ஒரு கணம், நினைத்தான்!! உடனே, தீட்டினான் இதுபோல. ஏனெனில், அவன் கவிஞன்.

* * *

கன்னடம், வங்கம், குஜராத்தி, மராத்தி, மலையாளம், அஸ்ஸாமிய மொழி, ஒரியா, உருது, இந்தி முதலிய மொழிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, ஆங்கிலம் கற்றறிந்த மேதைகள் கூட அழைக்கப்

அரங்கண்ணல்

பட்டு, அலகாபாத் நகரிலே, கடந்த மே 3ந் தேதியன்று முதல் மூன்று நாட்கள் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டிலே, தாராசிங் பானர்ஜி எனும் வங்கத் தோழர், முழக்கம் எழுப்பியிருக்கிறார்.

"இப்போதுள்ள அரசு, எழுத்தாளர்களும், கவிஞர்களும் எண்ணங்களைக்கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறது. தன்னுடைய வீரப் பிரதாபங்களைப் பற்றி பாடினால் அவர்களுக்கு, அந்தக் கால மன்னர்களைப் போல, பாராட்டும் பரிசும் வழங்கி, மீதமுள்ளவர்களையும்வளைக்கநினைக்கிறது. அந்தக் காலப் புலவர்கள் அரசர்களைப்பற்றிப் பாடினார்கள். பொன்னுக்கும் பொருளுக்கும் அவர்கள் பாடியதால், பாக்களிலே கற்பனையும் புகழ்ச்சியும்தான் அதிகமிருந்தன. ஏனெனில் அவர்கள் மக்களுக்காகப் பாடவில்லை. இருபதாம் நூற்றாண்டிலுள்ள நாமோ, ஜனநாயக யுகத்தில் இருக்கிறோம். விருப்பம்போல் கவிதைகள் புனையவேண்டும்! எழுதவேண்டும்! அப்போது தான் உண்மை இலக்கியம் உருவாகும். கட்டுப்பாடில்லாத கானம் பிறக்கும்."

ஏட்டிலே, இந்த முழக்கத்தைக் கண்ணுற்றபோது, சமாதிகளை நோக்கிப் பாடிய கவிஞனின் கவனம் வந்தது, எமக்கு! கட்டுப்பாடற்ற நிலைவேண்டும், எழுத்தாளர்களுக்கு! அப்போதுதான், உள்ளத்தைக் கவரும் இலக்கியம் உருவாகும் என்கிறார்!! குயிலைப் பூட்டிக் கூண்டிலே அடைத்துவிட்டு கூவச் சொல்லுவதாலும், தடிகொண்டு தாக்கி மயிலை ஆடச்

சொல்லுவதாலும் அழகான பாடலையும் அற்புதமான ஆடலையும் நாம் பெற்றுவிட முடியாது, அதட்டி மிரட்டி ஒரு சிங்கத்தை வசப்படுத்தி விடலாம்! ஆனால், ஒரு பூவை மலரச் செய்ய ஒரு போதும் முடியாது!! அடக்கி ஒடுக்கி, மாற்றானை மண்டியிடச் செய்துவிடலாம், அவன் மண்டலத்தையும் கைப்பற்றிக் கொள்ளலாம். ஆனால், ஒரு கவிஞனின் மனதை வளைக்க வேலும் வாளும் பயன்தராது! கோபமும் கொந்தளிப்பும் எழுத்துக்களைப் பொழியச் செய்துவிட முடியாது!

இதனாலேயே, இலக்கியம் சமைக்கும் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் வானம்பாடிகள் என்கின்றனர். "ஏடெடுத்தேன் கவியொன்று எழுத! வானம் என்னை எழுதச் சொல்லிற்று—வையகம் என்னைப்பற்றி எழுது என்று கூறிற்று" என்கிறார், புரட்சிக்கவிஞர். அந்தக் கவிதையிலே தென்படும் அழகு, அதட்டி மிரட்டினால் கிடைத்துவிடுமோ? அதுபோலவே, அலங்காரமான கட்டிலும், ஆசையைத் தீர்த்திடும் அத்தனை வசதிகளும் செய்து வைத்து, 'எழுதுங்கள்' என்று கூறியிருந்தால், அனலும் ஆவேசமும் கொதிக்க, "ஆகாவென்று எழுந்ததுபார் யுகப்புரட்சி!" என்கிற சுதந்திரக் குரலை எழுப்பியிருக்க முடியுமோ, தேசியக் கவிஞரால். தமிழிலே மட்டுமல்ல, உலகம் எங்கணுமே, உற்சாகமும் உணர்ச்சியும் மோதும்போது எழுந்த எழுத்துக்களில் காணப்படும் வேகமும் வீராவேசமும் கூனனையும் நிமிரவைக்கும்! குளிர் நிலவையும் எரிமலையாக்கும்! இதயத்திலிருந்து பீறிட்டுவரும் எழுத்துக்களுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. வில்லாளன் பகைகொளினும் கொள்ளற்க சொல்லாளன் பகை!—எனும் சுந்தர மொழி இதனாலேயே உருவாயிற்று. சொல்லேருழவர் என்கிறார் பெருந்தகை! வாளைவிட என் கையிலிருக்கும் பேனா சக்தி வாய்ந்தது, என்றான் வால்டேர்! உணர்ச்சியும் ஆவேசமும் மோதும்போது, எழும்பும் குரல் ஒலிக்கும்-எழுத்துக்களுக்கும் அவ்வளவு வலிவுமட்டுமல்ல, வனப்பும் உண்டு. வானம்பாடியைக் கூண்டுக்குள்போட்டு கொய்யாவும் மாவும், தேனும் தினையும் கொடுப்பதால் என்ன பயன்? பறந்து திரியும்போதுதான் அழகு! அதே போல, யாருக்கும் கட்டுப்படாமல், கண்ணுக்கெதிரே பட்டதை அப்படியே வார்த்தெடுத்துத் தரும் போதுதான், கவிதையும் இனிக்கிறது; எழுத்தும் சுவைக்கிறது.

இந்தச் சுதந்திரத்தை நசுக்குகிறதாம், இப்போதுள்ள அரசு! சொல்லுகிறார் பானர்ஜி!!

எம்மைப்பற்றி எழுது, என்று எழுத்து வேந்தர்களை, வளைக்கிறதாம். இந்த வற்புறுத்தலுக்குக் கட்டுப்படாதோரை, வஞ்சம் தீர்க்கிறதாம்.

சுதந்திரம் முகிழ்த்த நாள்முதல் எழுத்தாளர்களும் ஏடு நடத்துவோரும் கதாசிரியர்களும், அடையும் அல்லல்கள் அனந்தம், ஏடுகளுக்கு ஜாமீன் — எழுத்தாளர்களுக்குக் கட்டுப்பாடுகள்—திரையுலகிலோ, ஐயகோ, கூறவே வேண்டியதில்லை 'கத்திரிக்கோல்' செய்யும் சதியை.

இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளிருந்தால், எப்படி உண்மையான இலக்கியம் உருவாகும் என்று கேட்கிறார், பானர்ஜி. நிச்சயம் உருவாகாது, அதற்குப்பதில் 'கல்லாத ஒருவனை கற்றாய் என்பதும், பொல்லாதவனை புண்யாத்மா என்பதும்' போன்ற பொய்யும், கற்பனைகளும் கலந்த கவிதைதான் கிடைக்கும்.

கண்முன் கண்டவைகளை, அழகுற எடுத்துச் சொல்லும்போது, உண்மையான படப்பிடிப்பினைக் காண்கிறோம். உழவன் உள்ளம்! தறியாளர் கண்ணீர்! தொழிலாளியின் துயரம்!—இதுபோன்றவைகளை எடுத்துச் சொல்லும் போதும், எழுதும்போதும், கவிதையிலே கனல் பிறக்கிறது! கட்டுரையிலே, அனல் கிளம்புகிறது. அதைக்கண்டு, ஆட்சி, கவிதைபுனைவோரையும், எழுத்து வல்லாரையும் கட்டுப்படுத்தி என்னபயன்? கூடை முடைவது போன்ற பாடல்களையும் ஏடுகளையுமே பெற இயலும்! சாகாத எழுத்துக்களைச் சந்திக்க இயலாது.

உலகத்தில், ஒரு கட்டத்தை விட்டு இன்னொரு கட்டத்துக்கு ஒரு நாட்டைக் கொண்டு செல்ல முயன்ற எழுத்துகளின் சக்தியை யாரும் இனி மறந்திட முடியாது. ஏனெனில் அவைகள் உண்மையின் வார்ப்படமாகும். அந்த எழுத்துக்களிலே காணப்படும் ஆர்வத்தையும் அழகையும், பிறிதொன்றிலே, காண இயலாது. எழுதுபவன், வானம்பாடியாயிருக்கவேண்டும்! எண்ணியதையும் நினைத்ததையும் எழுதவேண்டும். அப்பொழுது உருவாகும், கவிதையினை, எழுத்தினை, காலத்தால் அழித்திட இயலாது.

*

கிராமங்களைப்பற்றிப் பாடுவதோ, ஏழை எளியவர்களைக் கவிதைகளில் வடித்துக் காட்டுவதோ பெருமைக்குரியது அல்ல என்று இங்கிலாந்தில் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது! அப்போதுதான், தலைப்பிலே நாம் தந்திருப்பதுபோன்றகருத்துடன், தான் வாழ்ந்த கிராமத்துச் சுடுகாட்டைப்பற்றிப் பாடினான் அந்தக் கவிஞன். அறுபத்து எட்டு நூல்களும், எழுபத்தையாயிரம் கவிதைகளும் இயற்றவில்லை, அவன்—புகழ்பெற. இந்த ஒரே ஒரு கவிதை அவனுக்குப் புகழைக் குவித்தது. பிரமாதமான கற்பனைகள்! கூட கோபுரங்கள், ஆடை அலங்காரங்கள், இவைகளைப்பற்றிப் பாடவில்லை அவன்—சுடுகாட்டைப்பற்றித்தான் பாடினான்.

இதற்கு முன்னும் பலர், சுடுகாட்டைப்பற்றப் பாடியிருக்கிறார்கள். எப்படி? காயமே, இது பொய்! காற்றடைத்தபை!—

பேரபாயம்

"இந்தியப் பிரதமர் நேரு தூரக்கிழக்கு பிராந்தியத்தின் 'டிட்டோ' ஆகவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய விசேஷத் தூதர் கிருஷ்ண மேனன் இன்றைய சர்வதேச அரசியலுக்கு ஏற்பட்டுள்ள பேரபாயம்" என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சியைச்சேர்ந்த ஜான் மெக்காவர்ன் என்பார் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சென்ற கிழமை கூறியுள்ளார்! கூறியவர் சர்ச்சில் கட்சியல்ல! நேரு போற்றும் அட்லீ கட்சியைச் சேர்ந்தவர்!!

★

என்கிற, தொனியில். இவனும் இரவு நுழையும் நேரத்தை வர்ணித்தான் — இடு காட்டில் சமாதியானவர்களுக்கு இனி என்ன வேண்டும்? —என்கிற கேள்வியையும் கேட்டான்.

அந்தளவோடு நின்றுவிடாமல் மேலும், பாடினன்.

"இப்படியெல்லாம் உழைத்து, வாழ்வில் தாம் பெற்றதைக் கொண்டு மகிழ்ந்து, பெறுததை எண்ணி ஏங்கி, இதோ சமாதியாகிவிட்டார்களே, இவர்களுடைய உழைப்பைப்பற்றி பெரிய மனிதர்கள் கேலிசெய்யவில்லையா? அது போகட்டும். பணம் படைத்தவர்கள், இறந்துபோன இந்த ஏழைகளுடைய உப்புசப்பில்லாத சின்னஞ்சிறு சரித்திரங்களையாவது உற்று நோக்கி, உதட்டில் புன்னகை பூத்ததுண்டா?"

இதுவரையில், எவரும் இந்த "விஷயத்தை"த் தொட்டதில்லை. பெரிய பெரிய கற்பனைகளையும், கலா பொக்கிஷங்களையும் வடித்தெடுப்பதில் இருந்தனர், கவிஞர்கள். ஆனல் இவன் ஒருத்தன் தான், கண்டதைக் கவிதையாக்கினன்!!

"ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒரு சரித்திரம்தான். இங்கே, தூங்குபவர்கள் பெரிய இடத்திலே பிறக்காதவர்களாயிருக்கலாம். ஆனல், இவர்கள் இங்கே வந்ததுபோல, பெரிய இடத்திலே பிறந்தவர்களும் வராமலா இருக்கப்போகிருர்கள்?" என்று கேட்டான். சமரசம் உலாவும் இடம் இது! அரசனும் ஆண்டியும் இங்கு ஒன்றுதான்' — என்கிற அரியதொரு போதனை. மேலும், தொடர்ந்தான்,

"இந்தச் சாதாரணதுகளுக்கு எவ்வித நினைவுச் சின்னமும் இல்லையே! யாரும், பெரியதொரு பிரசங்கம் செய்யவில்லையே என்று எண்ணுதீர்கள். அவை, செத்த உயிர்களைப் பிழைக்கச் செய்யவா போகின்றன? இல்லையல்லவா!" என்று கேட்டுவிட்டு கூறுகிருன்.

"சிம்மாசனத்திலமர்ந்து செங்கோலோச்சவேண்டியவர்களாக இருந்திருக்கலாம், இங்கே இறந்தவர்களில் சிலர். அறிவிற் சிறந்தவர்களாயிருந்திருக்கலாம். அரசியலையே ஆட்டிப்படைக்கும் ஆற்றல் மிக்கோராக விளங்கியிருக்கலாம். ஆனல் அறிவெனும் விரிந்த புத்தகம் அவர்கள் கண்களுக்குக் காட்டப்படாததால், கல்வி ஒளி கிடைக்கச் செய்யாததால் அவர்கள் சாதாரணதுகளாகவே செத்திருக்கக் கூடும். விலைமதிக்கவொண்ணுத பிரகாசமான முத்துக்கள் கடலுக்கடியிலே தோண்டி யெடுக்காததால் மறைந்து கிடக்கவில்லையா? பாலைவனத்தில் மலர்ந்ததால் எத்தனையோ மலர்கள் அனுபவிப்பாரற்று அழியவில்லையா?"

எப்படி கவிதை! சந்தர்ப்பமும் சம உரிமையும் இல்லாததால், சாதாரணதுகளின் பட்டியலிலே சேர்க்க வேண்டியதாயிற்று— அவை கிடைத்திருந்தால், இந்தக் கிராமத்திலேயே மக்கி மடிந்த இவர்களிலும் ஒரு "ஹாம்டன்", இருந்திருப்பான், ஒருவன் "மில்டன்"யிருப்பான்-ஒரு "கிராம்வெல்" இருந்திருக்கக்கூடும். ஆகவே இவர்கள் ஆடம்பரமோ நினைவுச் சின்னமோ இன்றி இங்கே கிடக்கிருர்களே என்று அலட்சியமாக நினைக்காதீர்கள், என்கிருன்!!

*

1716-ல் பிறந்து *1771ல்* இறந்த இந்தக் கவிஞன் பெயர், தாமஸ்கிரே என்பதாகும்! பணக்காரர்களைப் போல வாழ வேண்டியவன்தான் ஏழையும், ஆனல் சந்தர்ப்பமும் வாய்ப்பும் ஏழைக்கு இல்லாததால் கிராமத்துச் சுடுகாட்டில் ஒரு நினைவுச் சின்னம்கூட இல்லாது சமாதியாகிக் கிடக்கிருன் — ஆகவே, அந்த உழைப்பாளியை ஏளனம் செய்யாதீர்கள்!—என்று வெளிப்படையாக எழுதிய முதற் கவிஞன் இவன் என்கிருர்கள் ஆங்கிலேயர்கள். இவனைப் பின்பற்றியே, பிறகு வந்த வொர்ட்ஸ் வொர்த் எழுதினராம்.

இந்த ஒரே ஒரு கவிதை, உள்ளத்தில் எவ்வளவு உணர்ச்சியையும் உத்வேகத்தையும் ஊட்டுகிறது. காரணம், அதிலுள்ள உண்மைதான். இப்படி உண்மைகளை எடுத்துச் சொல்லுகிருேம் என்பதற்காக, அரசு அடக்குமுறையும் தண்டனையும் அளித்து தடுப்பது என்றுல் இயலுமா? ஒருபோதும் முடியாது! ஏனெனில் இவைகளனைத்தும் சாதாரண உண்மைகளாகும்!! காலம் எனும் பாதையிலே, தோன்றிடும் உண்மைகளை, பழமையின் மீதுள்ள பற்றின் காரணமாக மறைக்க இயலாது, அவைகளை எடுத்துச் சொல்லுவதால்தான், **மக்கள்கவி, புரட்சிக்கவி, சிந்தனைச்சிற்பி** என்போர் உருவாகிருர்கள். அவர்களை நலியச் செய்துவிட்டு, துதி பாடுவோரையும், துந்துபி பாடுவோரையும், அரியாசனத்திலமர்த்தி ஆரவாரம் செய்வதால், இலக்கியம் சமைத்துவிட முடியாது! அது இலக்கியத்துக்குச் செய்த சேவையாகவும் இயலாது! இதனையே, பானர்ஜி, உணர்த்தியிருக்கிருர், "கத்தரிக்கோலை"யும் கடுமையான சட்டங்களையும் நம்பியிருக்கும், காங்கிரஸ் அரசுக்கு.

★

'ஹோம்லண்ட்'

2—6—57 ஞாயிறன்று வெளிவரவிருந்த **'ஹோம்லண்ட்'** ஆங்கில இதழ் அன்று சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களால் வெளியிட இயலவில்லை.

9—6—57 ஞாயிறு முதல் **'ஹோம்லண்ட்'** இதழ் தவருமல் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

நிர்வாகி:
'ஹோம்லண்ட்'
காஞ்சிபுரம்

மாதத்துக்கு, இருபது!

நான்கு மாதத்தில்
84 பேர்கள் தானும்.

டில்லி பார்லிமெண்டில் நேருவின் துணை மந்திரியார், தெரிவித்திருக்கிருர்!

ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரை 84 பேர்கள் மட்டும்தான் சுடப்பட்டார்களாம்!!

“என்ன! என்ன!!”, என்று வியப்போடு நீங்கள் கேட்பது, தெரிகிறது. அகிம்சா சர்க்கார், உத்தமர் காந்தியடிகளின் பெயரைச் சொல்லி ஓட்டுக் கேட்கும் சர்க்கார், மாதம் ஒன்றுக்கு 20 பேர்கள் வீதம் சுட்டுக் கொன்றிருக்கிறது.

அட்டகாசம் செய்தனர்
கொள்ளைக் கூட்டத்தினர்
கொலைபாதகர்கள்

என்கிற ரகத்தினரல்ல இவர்கள்! வாழவேண்டும் என்று விரும்புகிறவர்கள்—நாகநாடு கேட்கும் நாகர்களிலே தான் நான்கு மாதத்தில் 84 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்!!

சமரசம் முகிழ்க்கிறது, நாகர்கள் சரணுகதி அடைந்துவிட்டனர், தனி நாடு ஆசையை விட்டுவிட்டனர், அஸ்ஸாம் முதலமைச்சரை அண்டி ஓடி வருகின்றனர், நேருவின் ராஜதந்திர வெற்றி என்று எந்த டில்லி கூறியதோ, அதே டில்லிதான் தெரிவிக்கிறது, மாதம் ஒன்றுக்கு 20 பேர் வீதம் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், என்று!!

இந்த இலட்சணத்தில் நேருபிரான், உலகுக்குப் போதிக்கிருர், மனித உயிர்களை மதிக்கவேண்டும். அகிம்சா நெறியைக் கடைப்பிடிக்கவேண்டும்-ஆளடிமை கூடாது—வேட்டால் நாடு வளைத்தல் ஆகாது, என்று. ஆனல், உரிமை கோரும் நாக நாட்டில், பிணமலை அடுக்கப்படுகிறது! முப்பது நாட்களில் இருபது பேர் சாகடிக்கப்படுகின்றனர்!!

நாகர் தம் கிளர்ச்சி குறித்துச் சின்னுட்களுக்கு முன் செய்திகள் வந்தன. இந்திய இராணுவத்தார் இப்படிப் பாய்ந்தனர், அப்படிச் செய்தனர், இத்தனை கிராமங்களை வளைத்தனர், என்றெல்லாம். ஆனல் இதோ ஒரு செய்தி வருகிறது.

1000 பேர் கொண்ட மலபார் ஸ்பெஷல் போலீசார்; திருச்சியிலுள்ள காஜா மலைப் பகுதியிலிருந்தும், கோவை மதுக்கரையிலிருந்தும், ஆவடியிலிருந்தும் திரட்டப்பட்டு கே. எஸ். வெங்கட்டராமன் எனும் டி. எஸ். பி. யின் தலைமையில் அங்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிருர்கள்.

எதற்குத் தெரியுமா? இராணுவத்துக்கு உதவி செய்ய!

இராணுவத்திற்கு உதவி செய்ய போலீசார் போகிருர்கள்!!

எதற்கு, இரண்டும்? ஒன்று போலீசாரே போதும் என்ருல் போலீசாரை மட்டும் அனுப்பலாம்! இல்லையென்ருல் இராணுவத்தை வைத்துக் கொண்டே காரியத்தைச் சாதிக்கலாம்!!

எனினும், ஏனோ இங்கிருந்து போலீஸ்படைகளைக்கொண்டு செல்லுகின்றனர் — ஒரு வேளை இருக்கிற இராணுவமும் போதாதென்று, போலீசாருக்கும் இராணுவ முறைகளைக் கற்றுத்தருகிருர்கள் போலும்!!

புதிய வரிகளைப் போட்டிருக்கும் டில்லி,
இராணுவத்துக்கென்று 253 கோடி ரூபாய்களை,

செலவழிக்கப்போகிறது! ஒன்றல்ல, இரண்டல்ல, 253 கோடி ரூபாய்கள்! அதாவது, நாம் புதிய வரிகள் மூலம் கட்டப்போகிருேமே தொகை அதைப் போல மூன்று மடங்கு ரூபாய், இர்ராணுவத்துக்காக!!

அவ்வளவு செலவழித்தும், போலீசாரையும், இராணுவ வேலைக்கு அழைக்கிறது,

*

சில நாட்களுக்கு முன்புதான், நேரு பண்டிதர், விமானமேறி இலங்கை சென்று புத்தர் பெருமான் விழாவில் கலந்துகொண்டு, உலகுக்கே உத்தம நெறிகளைப் பரப்பினுர்! ஆனல், அவரது ஆட்சியில்—மாதத்துக்கு இருபது உயிர்கள் பிணமாகின்றன—இருபது கோடி ரூபாய்க்கு மேல் மாதம் ஒன்றுக்கு இராணுவத்துக்குக் கொட்டப்படுகின்றது, போதாமல் போலீசாரும் அழைக்கப்படுகிருர்கள்!!

ஏனெனில், நாகர்கள், நேருவின் ஆதிக்கத்தை விரும்பவில்லை — தனி நாடு கேட்கிருர்கள் — சகிப்பாரா நேரு? புத்தர் விழாவில் தன்னையும் ‘ஒரு புத்தர்’ போலக் காட்டிக்கொள்வது! சொந்த விஷயத்திலோ, வலுச் சண்டைக்கும் வேதனை தருவதற்கும் செல்லுவது!!

உலகம் எங்கும் இராணுவச் செலவு குறைக்கப்படவேண்டும் என்கிருர்கள்.

புல்கானினும், ஐசனேவரும், மாக்மில்லனும், டிட்டோவும், மட்டுமல்ல, நேருவும், பிரமாதமாக அதை வலியுறுத்தி அறிக்கைகள் விடுக்கிருர்—அதியற்புத தூதர் கிருஷ்ணமேனன் மூலம் எங்கும் போய்ச் சொல்லச் சொல்லுகிருர். ஆனல், **சொந்த நாட்டில் 200 கோடியாக இருந்தது 253 கோடியாகிறது, இராணுவத்திற்கு! 53 கோடி ரூபாய் கடந்த ஆண்டைவிட, அதிகமாகிறது!!**

இந்தியாவைப் போன்றதுதான், சீனுவும், இன்னும் சொல்லப்போனல் எப்போது எதிர்த்து புதிய சீனுவை வாயில் போட்டுக்கொள்ளலாம் என்று காத்திருக்கும் சியாங்கேஷேக் வேறு இருக்கிருர், அந்தச் சீனுவிலிருந்து வருகிறது, இச்செய்தி:—

பீகிங், மே 23.

இராணுவத்தில் குறைப்பு உண்டுபண்ணப் போவதாக தளபதி சூ-யீ இன்று வெளியிட்டார். புதிய பொருளாதார அமைப்பில் ஏராளமான பணத்தை இராணுவத்துக்கு செலவழிப்பதற்கு இல்லையென்றும் அதனல் இம் முடிவுக்கு வந்ததாகவும்கூறினுர். நீக்கப்படும் இராணுவத்தினரில் பலரை, விவசாயத் துறையிலும் தொழில் துறைகளிலும் பணி புரியச் செய்யப்போவதாகச் சொன்னுர்.

வளங்கொழிக்கும் சீனு, தன் இராணுவச் செலவைக் குறைக்கிறது! வறுமை பெருகும் ‘பாரதமோ’ இராணுவச் செலவைக்கூட்டுகிறது— மாதம் ஒன்றுக்கு 20-பேர் வீதம் சுட்டும் தள்ளுகிறது!!

★

டில்லியில் என்ன நடக்கிறது என்று நேருவுக்குத் தெரியாதாம்! மே 17ல் பாரதீய வித்யா பவனம் எனும் நூல் வெளியீட்டகத்தைத் திறந்து வைத்த போது அவரே வெளியிட்ட உண்மை இது!!

“ஆபீசுகள் நிறைந்த காடுபோல இருக்கிறது டில்லி. இந்தப் பத்தாண்டுகளில், இந்தக் **காட்டில்** என்ன நடக்கிறதென்றே என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை”

ஊர்வலம்

—[ஞானக்கண்]—

"இத்தனை நாளும் இல்லாமல் இப்போது எங்கே வந்தாய்?" என்று அதட்டினார், நேரு பண்டிதர்.

"புத்தம் சரணம் கச்சாமி! அமைதி......அமைதி........" என்றேன் நான்.

"எங்கேயிருக்கிறது, அமைதி! யார் கொடுக்கிறார்கள் அமைதி?" என்று கோபத்தோடு புருவத்தை நெறித்துக் கொண்டார்.

"ஏன், இவ்வளவுகோபம்? டி.டி. கிருஷ்ணமாச்சாரி போட்ட வரிகளைப்பற்றிச் சொல்கிறீகளோ!" என்றேன், தயங்கிக் கொண்டே.

"அப்பப்பா! போதும், போதும், இந்தப் பதவி. வெளியில்தான் தொல்லையென்றால், உள்ளேஇருப்பவர்களாலும் உபத்திரவந்தானு— செச்செச்சே! எப்படியாவது காங்கிரசுக்குப் பலம் உண்டாக்க வேண்டுமென்று பார்க்கிறேன். இந்தச் சமயத்தில் இவ்வளவு வரிகளைப் போட்டு......", என்று கூறியவர் ஏனோ, நிறுத்திக் கொண்டார்.

"இந்த வரிகள்யாவும் அவசியம் —பொதுமக்களே! நீங்கள் வரி கட்ட, வரிகட்ட நன்றாக வாழலாம் ......என்று எங்களூர் காமராசர் மக்களிடம் போய்ச் சொல்லி காங்கிரசை வளர்க்கப் போகிறாராம். தெரியுமா?", என்றேன்.

"எனக்கு ஒன்றுமேபுரியவில்லை! தெற்கிலிருப்பவர்கள் போக்கே புரிவதில்லை!! பார்லிமெண்டில் என்ன நடந்தது தெரியுமா? விசுவாசப் பிரமாணம் செய்யும் போது ......"

"தெரியும்! தெரியும்!! எங்கள் சம்பத்தும், தர்மலிங்கமும் தமிழில் எடுத்தார்களாம்......"

"அது சரியப்பா! அவர்கள் கம்யூனிஸ்டுகள் எல்லாம் தமிழிலே எடுக்கட்டும். இந்த காங்கிரஸ் காரர்களாவது, மானத்தைக் காப்பாற்ற வேண்டாம். ஒருவர்கூட இந்தியில்......", என்று கூறிக் கொண்டேயிருந்தபோது, யாரோ போனில் கூப்பிட்டார்கள். அவர்முகம் மலர்ந்தது! ஐப்பானுக்கு வருமாறு அவரை அழைத்திருக்கிறார்கள், என்று புரிந்து கொண்டே கிளம்பினேன்.

*

"இந்திக்கு இடமா? இல்லை! இல்லை!!" என்று பெருமுழக்கம், என்காதில் விழவே, ஒருவேளைக்குத் தமிழ் நாட்டுக்குத்தான் வந்துவிட்டோமோ என்று பார்த்தேன்! இல்லை, பஞ்சாப் மாநிலம்!!

ஆயிரக்கணக்கானமக்கள்கூட்டமாகக் கூடிநின்று, "இந்திக்கு இடம் தரோம்!" என்று முழக்கமிட்டார்கள்.

"யார் இவர்கள்?" என்று கேட்டேன்.

"இவர்களைத் தெரியாதா, சீக்கியர்கள்! மாஸ்டர் தாராசிங்கின் கட்சியைச் சேர்ந்தவர்கள்", என்றார், பதில் கூறியவர்.

"மாஸ்டர் தாராசிங்! அந்த சீக்கிய சிங்கத்தைத்தான் நேரில் வரவழைத்து நேரு பேசியதாகவும், அப்பெரியார் காங்கிரசோடு சேர்ந்து விடும்படி சீக்கியர்களுக்குச் சொன்னதாகவும் கேள்விப்பட்டனே", என்றேன்.

"அது, அப்போது அவர்சொன்னார்அப்படி அதனால் தாய்மொழிப் பற்றுக் கொண்ட நாங்கள் எங்களைக் கொடுத்து விடுவோமா?", என்றார் ஆவேசத்துடன்.

"என்ன இப்பொழுது தாய்மொழிக்குக் கேடு வந்துவிட்டது?", என்றேன். அவர் என்னைப் பார்த்த பார்வை பயமூட்டவே, ஒரு ஓட்டம் பிடித்தேன்.

*

"ஆத்மானந்தருக்கு ஜே!" என்கிற சப்தம், அதே பஞ்சாபில் இன்னொரு பக்கம் கேட்டது.

நாலைந்து பேருடன், அந்த ஆத்மானந்தர் போய்க்கொண்டிருந்தார்.

"பஞ்சாபி ரக்ஷதளம்" என்கிற போர்டை, இருவர் தூக்கிக் கொண்டு போயினர்.

"இது, என்ன?" என்று கேட்டேன்.

"தெரியாதா உனக்கு! இந்த சீக்கியர்கள் பஞ்சாபி மொழியை மட்டுமே அரசாங்க மொழியாக்க வேண்டும் என்கிறார்கள். நாங்கள் இந்திக்கும் சம இடம் இருக்க வேண்டும் என்கிறோம். இதற்காக நாங்கள் உண்ணாவிரதமிருக்கவும் தயார்" என்றார் ஒருவர். ஆளைப் பார்த்தேன்! அசல் இந்து மகா சபாக்காரராகத்தெரிந்தார்சரிதான் இன்னொரு "குருக்ஷேத்ரம்" ஏற்படாமல், இவர்கள் தகராறு தீராதுபோலும் என்று கருதியபடி கிளம்பினேன்.

*

ஐதராபாத் பக்கமாக வந்துகொண்டிருந்தபோது, மறைந்த மாவீரர் பிரகாசம் நினைவு வந்தது. அங்கு போனேன். சென்னையிலிருந்தபோது எனக்கு அறிமுகமான அதிகாரி ஒருவரைக் கண்டதும், மகிழ்ச்சியோடு அவர் அருகேபோனேன். அவர் என்னைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

"என்ன! என்னைத் தெரியவில்லையா?"

"தெரியாமல் என்ன!"

"தெரிந்துமா, பேசவில்லை?"

"பேச்சென்ன வேண்டியிருக்கு!"

"ஏன், இவ்வளவு கோபம்?"

"பிறகென்னய்யா! பிரகாசம் எவ்வளவு பெரிய தலைவர்—எத்துணை நாள் கூட இருந்தவர்— எங்க சஞ்சீவி ரெட்டி கூட மெட்ராஸ் வந்துதான் ஐதராபாத்துக்கு வந்தார். அப்படியிருக்கும் போது உங்க காமராஜர் வந்து தன் கடைசி மரியாதையைத் தெரிவித்திருக்கக் கூடாதா?" என்றார்.

"செய்திருக்கலாம்! ஆனால் செய்யவில்லையே!" என்றேன்.

"நல்ல உலகமய்யா, இது!" என்றார் விரக்தியுடன். அப்போது தான் கவனித்தேன், அவர் கையில் ஏழெட்டு பிரகாசம் அவர்களின் படங்கள் இருந்ததை.

"இதென்ன!" என்று கேட்டேன்.

"இதென்னவா? பிரகாசம் திரு உருவம்! அவர் பிரதமராயிருந்தபோது என். ஜி. ஓக்களுடைய சம்பளம் உயரும்படிச் செய்தாரே. அதன் அறிகுறியாக எங்கள் வீடுகளிலெல்லாம் அவர் உருவம் விளங்கும்படிச் செய்யப் போகிறோம்" என்றார்.

"நல்லது" என்று கூறிவிட்டுக் கிளம்பினேன். ★

தங்கம் தேடுகிறார்கள்!

"இந்த மாதம் சங்கிலியைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவைத்தேன்!"

"யார் அது சங்கிலி? சொந்தக்காரப் பையனா......"

"சங்கிலி என்பது ஆளல்ல, அப்பா! மனைவி போட்டிருந்த தங்கச் சங்கிலி. திடீரென ஒரு செலவு வந்துவிட்டது. அடகு வைத்து, சரிகட்டிக் கொண்டேன். பணம் வந்ததும் மீட்கவேண்டும்"

*

"கையில் பத்துப்பணம் வந்தால்போதும், உடனே தங்கம் வாங்கி, ஒரு நகையாக்கி விடுகிறாள், மங்களம்!"

"கெட்டிக்காரி! நாளைக்கு ஒரு கஷ்டம் வந்தால், உபயோகப்படும் என்கிற முன்யோசனையோடு செய்கிறாள்,"

*

"பத்துச் சவரனில் நகை போடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள், பெண் வீட்டில்..."

*

தங்கம்!—பற்றி, சர்வசாதாரணமாக நாம், ஆங்காங்கே, கேட்கும் தினசரிக் குரல்கள் இவை. கிட்டத்தட்ட, தங்கம், எல்லாக் குடும்பங்களிலும் ஒரு கௌரவமான பொருளாகக் கருதப்படுகிறது. குடும்பப் பெண்கள் அணியும் தாலி, அவர்கள் எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும் சக்திக்கும் வசதிக்கும் ஏற்றபடி தங்கத்தால் செய்யப்படுகிறதே ஒழிய, வெள்ளி பித்தளை, செம்பு, போன்ற பிற உலோகங்களை நாடுவதில்லை எவரும்.

மொகஞ்சதாரோவும், அரப்பாவும் திராவிட நாகரீகத்தை விளக்கும் சின்னங்கள் ஆகும், இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது மூதாதையர் எப்படி வாழ்ந்தனர் என்பதை விளக்கும் நாகரீகக் கண்ணாடியாகும் அவை! சிந்து நதித்தீரம் வரையிலே, ஒரு காலத்தில் நமது பெருமையும் உறவும் பரந்து கிடந்தது என்பது அவ்விரண்டும் நகரங்களாலும் விளங்குகின்றன.

புதையுண்டுபோனஅந்நகரங்களை ஆராய்ச்சி செய்த **மாக்கே** எனும் அறிஞர், எழுதுகிறார்; அப்போது அங்கு வாழ்ந்த மகளிர் **தங்கத்தா**லான பல ஆபரணங்களைப் பூண்டு வாழ்ந்ததாக. ஐயாயிரம் ஆண்டுகட்குமுன்பே,தங்காபரணம்பூணும் வழக்கமிருந்திருக்கிறது, இங்கு! சிறுசிறு குண்டுகளாகச் செய்து, அவைகளுக்குள் துவாரம்போட்டு தங்கத்தாலேயே சிறு கம்பியும் செய்து, அவைகளை இணைத்து இப்போது கழுத்தில் போட்டுக் கொள்ளுகிறார்களல்லவா — அப்போதும் இருந்ததாம்! வளையல்கள், காதணிகள் கழுத்தாபரணங்கள், முதலியனவும் அங்கே கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால், தங்கத்துக்கு, நமது சமூகத்தில் இருந்து வரும் மதிப்பு விளங்கும்.

இன்றைக்கு2500ஆண்டுகளுக்கு முன்பு, தங்கம் ஏராளமான அளவில், இங்கு வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டது! தமிழகத்துக்கும் ரோமாபுரிக்கும் வர்த்தகம் நடைபெற்ற நாட்களில் ரோமானியர் ஏராளமான தங்கத்தைக் கொடுத்து, நமது பொருள்களை வாங்கிச் சென்றனர் என்பதை நாம் அறிவோம். இந்திய உபகண்டத்தைச் சுற்றிப்பார்த்த **மெகாஸ்தனீஸ்** எழுதுகிறான், "எறும்புகள் தோண்டுகிற இடமெல்லாம் தங்கம் இருந்தது" என்பதாக. அவ்வளவு தூரம், நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் தங்கப் புழக்கம் இருந்திருக்கிறது! சந்திரகுப்தன் காலத்தில், தங்கம் எப்படியெப்படி இருந்தது என்பதை, சாணக்கியன் விரிவாக விளக்கியுள்ளான்! மௌரியர் தம் ஆட்சிக் காலத்தில், நாடெங்கும் தங்க மொகராக்களே புழக்கத்தில் இருந்திருக்கின்றன. அரசினைச் சேர்ந்த பொற்கொல்லர்கள்மக்களிடமிருக்கும் தங்கத்தையும் வெள்ளியையும் வாங்கி அதே எடையில் நாணயங்களைச் செய்து கொடுத்தார்களாம்.

மௌரியர்களுக்குப் பிறகு, இந்திய உபகண்டத்துக்குள் ஏராளமான தங்கம் ஒவ்வோராண்டும் இறக்குமதிசெய்யப்பட்டிருக்கிறது. இதனால், உலகிலுள்ள பெரும்பாலான தங்கம், இங்கே வந்திருக்கிறது. ரோமானியர் சுமார் 400-ஆண்டுகள் வரை, இங்கே வர்த்தகம்செய்தனர். அப்போது அங்கேயிருந்து, தங்கம் வந்தது. ரோமாபுரியிலேயே, இதனால், தங்கம் இல்லாத நிலை ஏற்பட்டதாம்! "ஆடம்பரப் பொருள்களுக்காகவும், அணங்குகளின் ஆசைத் தேவைகளுக்காகவும் தங்கத்தைத் தத்தம் செய்தோம். நீரோ மன்னன் காலத்துக்குப் பிறகு நீடித்த இந்நிலைமையாலேயே, ரோம் சாம்ராஜ்யம் நொடிக்க வேண்டியதாயிற்று;" என்று எழுதுகிறான், ஒரு சரிதாசிரியன், அந்த அளவுக்கு, தங்கம் வந்தது இங்கே!

கிருஸ்துவ சகாப்த ஆரம்ப காலத்தில், இந்திய உபகண்டத்துக்கு, தெற்கு அரேபியாவிலிருந்து தங்கம் வரலாயிற்று. ஆபிரிகாவிலிருந்து வாங்கிய தங்கத்தை, தாங்கள் வாங்கிப் போகும், ஆடைகள், வாசனைப் பொருள்கள், முத்து, மிளகு, மயில் தோகை, அரிசி, போன்றவைகளுக்காக மத்யகிழக்கு வியாபாரிகள் வழங்கினர். இப்படி ரோமாபுரியிலிருந்தும் ஆபிரிகாவிலிருந்தும்தங்கம்வந்து குவிந்தது.

இதைக்கண்டு, 17-வது நூற்றுண்டில் இங்கு வந்த ஒரு வெளிநாட்டு சரிதாசிரியன் எழுதினுன், "உலக முழுவதையும் சுற்றிக் கொண்டு வரும் தங்கம், இந்தியாவுக்கு வந்ததும் புதைந்துவிடுகிறது!" என்று.

இப்படி, இங்குவந்த தங்கம், சாதாரணர்களினுல் மட்டுமல்ல, அரசர்களாலும் போற்றப்பட்டது! தங்கம் யாரிடம் இருக்கிறதோ, அவர்களுடைய மதிப்பு அதிகமாகக் கருதப்பட்டதால் ஒவ்வொருவரும் தங்கத்திடம் ஆசை கொண்டனர். தானம் கொடுப்பதிலேயே, **சொர்ணதானம்** விசேஷமும் பெருமையும் நிரம்பியதாகக் கருதப்பட்டது. அக்பர்பேரரசன், தன் அரண்மனையில் 60,000 தங்கத்தாலான பாத்திரங்களைச் செய்துவைத்திருந்தானும்--விழாக்களின்போது இவை உபயோகப்படுத்தப்பட்டனவாம்! அதுமட்டுமல்ல **தங்கபஸ்பம்** செய்து உணவோடு உட்கொள்ளும் பழக்கமும் இங்கு இருந்திருக்கிறது. இதனுல், மேனிக்கு மெருகும், வியாதிகளைப் போக்கும் குணமும் இருப்பதாகக் கருதப்படுகிறது. சிறுவில்வாழ்ந்த மன்னன், தங்கபஸ்பம் வாங்கிப் போய் நிறையச் சாப்பிட்டானும்! வந்த தங்கம், அரண்மனைகளில் மட்டுமல்ல, கோயில்களுக்குள்ளும் போய்ப்பதுங்கிக்கொண்டது. சிதம்பரம் கோயிலுக்குத் தங்க ஓடுகள்! சிரங்கம் கோயிலுக்குப் பொற்கலசம்! என்று இதுபோலவும்; ஐநூறு சவரனில் ஆபரணம், அறுநூறு பவுனில் அட்டிகை, இதுபோல அம்மனுக்கு அணிவிக்கப்படும் அணிமணிகளாகவும் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது.

மன்னர்களிடமும், கோயில்களிலும் சிக்கிய தங்கம் போக, எஞ்சியது மக்களிடம் இருந்தது! மக்கள் தம்வசம் இருந்த தங்கத்தைப் பத்திரப்படுத்தி பூட்டிவிடவில்லை. தாயிடமிருந்து மகளுக்கும், தந்தையிடமிருந்து மகனுக்கும், கஷ்டம் வந்தபோது கடனுக்குமாக, கைமாறிக்கொண்டேயிருக்கிறது.

ரோமாபுரி, ஆபிரிகா முதலிய இடங்களிலிருந்து புராதன காலத்தில் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டதோடு, நின்றுவிடவில்லை. பிரிட்டிஷார் காலத்திலும், ஏராளமான தங்கம் இங்கே, வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டது. இப்படி கொண்டுவரப்பட்ட தங்கம் எல்லாம் எங்கே? ஒரு அமெரிக்க பொருளாதர அறிஞன் எழுதுகிறுன்:

"இப்போதுள்ள நாடுகளில், தங்கத்தைப் பதுக்கிவைப்பதென்பது, இந்தியாவில் மிக அதிகமாகும். உலகத்திலுள்ள தங்கத்தில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் தூங்குகிறது"

பதுக்கிவைத்திருக்கிருர்கள் என்றுல், யார் பதுக்கிவைத்திருக்கிருர்கள்? ஏழைகளும், இல்லாதவர்களும் தங்கத்தை வாங்குவதும், ஆபரணங்கள் செய்வதும் தலைப்பிலே சொன்ன காரணங்களுக்காகத்தான். அழகுக்காக! அந்தஸ்துக்காக! — என்று தங்கத்தை விரும்பிச் சேகரிப்போரைவிட, **"கஷ்டம் வந்த சமயத்தில் காப்பாற்றும்"** என்பதற்காகவே பலர் தங்கத்தை விரும்பி வாங்கி, ஆபரணங்களாகவும், அணி மணிகளாகவும் வைத்துக்கொள்ளுகின்றனர். சராசரி குடும்பம் தங்கத்தை நாடிடக் காரணமே இதுதான். எவரும் மறுக்க முடியாது, இதை.

இவ்வளவு தங்கம், நாட்டுக்குள் இருக்கிறது என்று அறிந்த காரணத்தால்தான், தங்கம் தேவைப்படும் நிலையிலே இருக்கிற டில்லி அரசு, வேண்டுகோள் விடுக்கிறது.

> "மகாஜனங்களே! ஆபரணங்களின்மீது ஆசைவைக்காதீர்கள். அதை சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு, பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள்"—என்கிருர் நேரு.
>
> "தாலியைக் கூடக் கழற்றிக் கொடுங்கள்! அதிலிருக்கும் தங்கம் கூட, நாட்டுக்குத் தேவை" — என்கிருர், டி. டி. கே.

உலக முழுதும் நம்முடைய ரூபாயை ஏற்காது! ஆனுல் தங்கத்தை ஏற்கும். அதனுல், ஆங்காங்கே மறைந்து கிடக்கிற தங்கம் கிடைத்தால், பெரிய பெரிய இயந்திரங்களை அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வாங்கலாமே, என்கிற ஆசையில் இப்படிப் பேசுகிருர்கள்.

நோக்கம் தவறுடையது என்று கூறுர், எவரும். ஆனுல், இந்திய உபகண்டத்து மக்கள், ஏன் தங்கத்தைத் தேடுகிருர்கள், பூட்டுகிருர்கள் என்கிற அடிப்படைக் கருத்தினை உணரவில்லை அவர்கள்.

அழகுக்கும், அந்தஸ்துக்கும்— தங்கம் விரும்பப்படுகிறது என்றுல், போதனைபுரிந்து, மக்களுக்கு நவநாகரீக உலகினைக் காட்டி, ஆசையை குறைக்கும்படி தூண்டுவது எளிது.

ஆனுல், ஒரு சவரனும், நான்கு சவரனும் வைத்திருக்கும் ஒவ்வொருவரும், அழகையும் அந்தஸ்தையும்விட, கஷ்டம் வரும் சமயத்தில் உதவும் கடவுள் போலக் கருதுகின்றனர், தங்கத்தை.

இன்றுள்ள சமூக அமைப்பில், தன்னுடைய எதிர்காலம் பற்றி அவ்வளவு பயம் இருக்கிறது, ஒவ்வொருவருக்கும்! இந்தப் பயம்போக ஒவ்வொருவருக்கும் தேவைக்கேற்றவசதிகள் கிடைக்கும் என்கிற உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்! அதைச் செய்யாத வரையில், பயமும் தீராது; பலனும் கிடைக்காது.

ஆனுல், எதிர்காலம் பற்றிய கவலைக்காக இல்லாமல், வெறும் ஆடம்பரத்துக்காகவும் —அழகுக்காகவும் தங்கத்தைச் சேர்த்து வைக்கும் இடங்களும் உள்ளன, நாட்டில்.

கிருஷ்ணமாச்சாரியின் வரவு செலவுத் திட்டத்தின்போது, புதுவரிகளைக் கண்டித்துப் பேசிய பூபேஷ்குப்தா என்பார் அந்த இடங்களைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிருர், பார்லிமெண்டில்,

குவாலியர்
இந்தூர்
பரோடா
ஐதராபாத்

போன்ற மன்னர்கள் வாழும் மாடமாளிகைகள்தான் அவை! பூபேஷ் ஒரு கம்யூனிஸ்டு என்பதால் அதோடு நிறுத்திக்கொண்டார்— இந்த இடங்களோடு, நமது ஆலயங்களையும் சேர்த்துக்கொண்டு, ஆங்காங்கேயிருக்கும் தங்கத்தைத் திரட்டினுல், எவ்வளவோ கிடைக்கும்!! ஆனுல், பலன் கிடைக்கும் இந்தப் பாதையை விட்டுவிட்டு, சாவுக்கும் வாழ்வுக்குமிடையிலே, தவிப்போரிடம் போய், 'தங்கம் கொடு' — 'தாலி சரடைக்கொடு, என்கிருர்கள்!!

★

தயங்கிக்கொண்டே!

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்காகவே இந் நிலையம் ஏற்படுத்தப்பட்டதற்குத் தக்க காரணங்கள் உண்டு. ஏனெனில், இவை தென்நாட்டு மொழிகள். "தக்கணம்" என்பது பூகோள நூற்படி பழைய இந்தியாவிலே, விந்தியத்தின் தென்பாகமானலும், பண்பாட்டின்படி இந் நான்கு மொழிகளையோ, அவற்றின் கிளைமொழிகளையோ பேசும் மக்களைக்கொண்ட பிரதேசத்தையே குறிக்கும். இம் மொழிகள் நான்கும் ஓரினத்தன என்பதில் ஐயமில்லை. "திராவிடம்", என்ற அடைமொழியைச் சேர்க்க நான் தயங்குகிறேன்."

*

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலுமுள்ள இலக்கியங்களைப் பரிமாறிக் கொள்ளவும், மேலைநாட்டு இலக்கியங்களை இந்த மொழிகளில் வெளியிடவும், அமைக்கப்பட்டுள்ளதல்லவா "தென்னிந்திய புத்தக டிரஸ்ட்" *எனும ஒரு அமைப்பு! அதன் சார்பில், தேவராஜ் பிரைவேட் லிமிடெட் கம்பனியார் 1½ ரூ. விலையில் வெளியிட்டுள்ள சிறுகதை மஞ்சரி எனும் நூலின் பொதுவுரையில் இப்படித் தீட்டியுள்ளார், சென்னை உயர் நீதிபதி ராஜமன்னார் அவர்கள்!!*

நான்கும்
ஓரினத்தன
ஐயமில்லை

என்று குறிப்பிடும் உயர்நீதிபதியார், "திராவிடம்" எனும் அடைமொழியைச் சேர்க்க, தயங்கும் காரணம் என்ன தெரியுமா?

"......அது, 'மொழி', 'இனம்' என்ற பொருளில் கொள்ளப்படாமல், கருத்து வேற்றுமை, அரசியல் என்ற ஒரு நோக்குடன் பயன்படுத்தப்படுகிறது."

விளக்கம், திருப்தியாயில்லையே, 'குழப்பம்' அன்றோ தெரிகிறது, எனபீர்கள்! தலைமை நீதிபதியாயுள்ளாரே, வேறென்ன செய்வார்!!

மொழி, இனம்—என்கிற பொருளில் "திராவிடம்" என்பதை ஒப்புக்கொண்டாலே, போதுமே! அதற்குப் பிறகு, வடக்கு தெற்கு, தானாகவே வந்து தீருமே!!

நீதிபதி அவர்களுக்கு இருக்கிற, இந்தத் 'தயக்கம்', ஆச்சாரியாருக்குக் கூட இருந்ததல்லவா, அரசின் சின்னமாகயிருந்தபோது! ஆகவே, இந்தளவுக்காவது உயர் நீதிபதியார் ஒப்புக்கொண்டது கண்டு மகிழ்கிறோம்!! மேலும் அவர், எழுதுகிறார்,

"......இம்மொழிகளிடையே காணப்படும் ஒருமைப்பாடு தவிர, இம்மொழி பேசும் மக்களிடையேயும் காணப்படும் கலாசாரம் இப்பகுதியை இந்தியாவின் ஏனைய பகுதியினின்றும் தனித்துக் காட்டுகிறது. சாதாரணமாக நாம் அறிந்துகொள்ளும் கர்நாடக சங்கீதமும் இதைத் தெளிவுபடுத்தும். அவ்வாறே இப்பகுதிகளில் உள்ள சிற்பக்கலையும், கட்டிடக்கலையும் தனிப்பெருமையுடையன. மக்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், விழாக்கள் முதலியவற்றிலும் குறிப்பிடத்தக்க ஒருமைப்பாட்டைக் காண்கிறோம்..."

மகிழ்ச்சி அதிகமாக இந்த விளக்கம் போதாதா! மொழிமட்டுமல்ல கலாச்சாரம் தனி; சங்கீதம் மட்டுமல்ல கலையும் தனி; அவை மட்டுமல்ல, பழக்கவழக்கங்கள், விழாக்களும் தனி. தயங்கும் நீதிபதியே, தருகிறார் பட்டியல். தயக்கம் நீங்கும் காலம் வராமலா போகும்?

★

படிப்பில்லாத, ஏழ்மையான, சுலபத்தில் நம்பக்கூடிய கிராமாந்திர மக்களைத் தவிர, மற்ற கல்வி பெற்றவர்களும், மேதாவிகளும் சென்ற ஒன்பது ஆண்டுகளாக தன்னுடைய ஓர் ஆள், ஓர் கட்சி ஆட்சியில் நேரு எப்படி தோல்வி பெற்று விட்டாரென்று எல்லோரும் நன்கு அறிவார்கள். ஐந்தாண்டுத் திட்டமென்கிற ஓர் ஜம்பமான பெயர் கொடுக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 2353 கோடிரூபாய் சிலவழிக்கப்பட்டதே தவிர, அதனால் அதிக உணவுப் பொருளும் கிட்டவில்லை. துணிமணிகளும் அதிகரிக்கப்படவில்லை. மக்கள் தங்குவதற்கு விடுதிகளும் விருத்தியாகவில்லை. வேலையில்லாத திண்டாட்டமும் குறைவில்லை. அன்றைவிட இன்று மக்கள் அதிக ஏழ்மை அடைந்து விட்டார்கள். பிழைப்பு நடத்துவதும் அதிககஷ்டமாகிக் கொண்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் குடித்தனச் செலவும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. நேருவின் அதிக விளம்பரம் பெற்ற அன்னிய அரசியல் முறையானது யுத்தத்தை நமக்கு அருகிலேயே கொண்டு வந்துவிட்டது. இன்றைக்கு நாம் சிநேகிதர்களற்றவராகிவிட்டோம். நமது கைவசம் பணமும் கிடையாது. வெளி நாடுகளில் எக்சேஞ்சு சாதனங்களும் கிடையாது. நாம் முண்டமாகி நிற்கிறோம்.

பசியால் வருந்துகிறோம். போண்டியுமாகி விட்டோம். நேருவும், அவருடைய காங்கிரஸ்காரர்களும் சில ஆண்டுகளாக ஆட்சியோடு ஜாலியாக குடித்தனம் நடத்தி வந்தபடியால் இந்த கதி நமக்கு வந்துவிட்டது. இப்படி இருந்தும் 48 சத வீதம் ஓட்டுக்களால் காங்கிரஸ் மறுபடியும் ஆட்சியில் ஸ்தாபிக்கப்பட்டது. 14 மாகாணங்களில் 12 மாகாணத்தில் காங்கிரஸ் மெஜாரட்டி பெற்றார்கள். இதுதான் மக்களின் படிப்பின்மையாலும், அறியாத்தனத்தாலும் ஏற்பட்ட அதிசயம். மக்களை மீண்டும் படிப்பில்லாதவர்களாகவும், முட்டாள்களாகவும் வைத்துக் கொண்டே இருந்தால் இந்த அதிசயத்தை எத்தனை தடவை வேண்டுமானாலும் மீண்டும் புதுப்பிக்க முடியும்.

—"பிலிம் இந்தியா"

அந்த வட்டாரத்திலிருந்து

திரு. கிருஷ்ணமாச்சாரியாரின் திருஉருவத்தைப் போட்டு, 'சென்னை வாசிகளே! தேர்தலில் இவருக்கே வாக்களியுங்கள்' என்று பக்கம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விளம்பரம் போட்டு, வேண்டுகோள் விடுத்த ஏடு "சுதேச மித்திரன்" எழுதுகிறது, செடியை வளர்க்கும் நோக்கம் நிறைவேற, அதன் வேரைப் பிடுங்கும் வழியை நாம் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று. ஆனால், 'திக்' விஜயம் செய்யும் காமராஜர் சென்ற இடமெல்லாம் தெரிவிக்கிருராம், ஏழைகளுக்கு ஒன்றும் டில்லி வரிபோடவில்லை. 50-சட்டைகள் போடும் பணக்காரர்கள் 4-சட்டைகளைக் குறைத்துக் கொள்ள நேரும். அவ்வளவுதானே ஒழிய, வரிகள் ஒன்றும் பிரமாதம் அல்ல, என்று!!

இந்த 'தீவிர' உண்மையை காங்கிரஸ் பிரச்சாரகர்கள் மூலம் மக்களுக்கும் எடுத்துணர்த்தி தி. மு. க-வின் விஷமப் பிரச்சாரத்தை வேரறுக்கப்போகிருராம்! திரு.காமராஜருக்கு, நாட்டின் கண்டனம் தி. மு. க-வின் கண்டனமாகப் படுகிறது போலும்! டில்லியின் அக்கிரம வரிகளை நாம் மட்டுமல்ல, கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள் போன்ற சகலரும் கண்டிக்கின்றனர். இவைகளையாவது, எதிர்க் கட்சிகள் என்று கூறிடக் கூடும் காமராஜர். காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே, கண்டிக்கிருர்களே!!

"தீப்பெட்டிக்கு விலை காலணு உயர்ந்தால் என்ன? ஆண்டுக்கு ஒருத்தருக்கு அணு-12 தானே ஆகிவிடப் போகிறது! இது ஒரு பெரிய வரியா?"

கேட்கிருர், காமராஜர்! இவர் மட்டும்தான் ஏழை மக்களின் நேசர்போலவும், ஏனைய கட்சிகள் எல்லாம் துரோகம் செய்வன போலவும் கருதிக்கொண்டு!

"புதிய வரிகள் மூலம் கிடைக்கும் மொத்தத் தொகை ரூ. 92·85 கோடியில் 25-கோடிதான் சற்று வசதி படைத்தவர்களால் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. மற்ற தொகை முழுவதும் ஏழைப் பொதுமக்கள்மீது விழும் பெரும் சுமையாக இருக்கிறது. எளியவர்களின் அன்ருட வாழ்க்கையில் இன்றியமையாதனவாகப் பயன்படுத்தப்படும் காப்பி, சர்க்கரை, தேனீர், தீப்பெட்டி, காகிதம், புகையிலை, அஞ்சலட்டை போன்ற பல்வேறு பொருள்கள் வரி விதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன"

என்று புள்ளிவிபரத்தோடு எடுத்துக் கூறுகிருர், நமது நாவலர் நெடுஞ்செழியன்! இதற்குப்பதில் அளிப்பதுபோல எண்ணிக்கொண்டு, காமராஜர் கழறுகிருர், ஏழைகளுக்கு வரி போடவில்லையாம்—அவர்கள் கட்டப்போகிற வரி கொஞ்சம்தானும்! நாவலர் தரும் விபரமாவது. கசக்கக் கூடும் காமராஜருக்கு. இதோ, காமராஜருடன் சேர்ந்து கிருஷ்ணமாச்சாரியாருக்குத் துதி பாடிய, சுதேச மித்திரன் கூறுகிறதே,

"......சொற்ப வருவாயைக் கொண்டு ஜீவிக்கும் அரைப் பட்டினிகள். இங்கு மாத சராசரி வருமானமே ரூ. 26-தான். இவர்களுடைய சக்திக்குத் தக்கபடிதான் இங்கு வரி விதிக்கமுடியும் என்பதை — பொறுப்புள்ளவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்"

பொறுப்பில் இருப்பவர்தான் காமராஜர்! எனினும், ஏழைக்கு இதனுல் ஒன்றும் தொல்லையில்லை —இந்த எதிர்க்கட்சிகள் இப்படிக் கூப்பாடுபோடுகின்றன, என்கிருர்.

"நடுத்தர, கீழ் மத்யதர வகுப்பினரில் பெரும் பகுதியினரை அதிக அளவில் பாதிக்கும் அத்யாவசியப் பண்டங்களின் விலைகள் ஏறுமுகமாக இருந்துவரும் இத்தருணத்தில் இந்த அதிகப்படி சுமையை இவர்கள் தாங்கமுடியாது. இதற்கு நேர் மாருக பணக்காரர்களுக்கு அதிகப்படி வரி விதிப்பிலிருந்து உடனடியாக கணிசமான நிவாரணம் கிடைக்கும். இப்போது கிடைக்கும் எல்லாப் புள்ளிவிபரங்களிலிருந்தும், பணக்காரர் ஏழைகளுக்கு இடையே வாழ்க்கை நிலையில் உள்ள ஏற்றத் தாழ்வு, கடந்த 9-அல்லது 10-வருடங்களில் 'குறைவதற்குப் பதிலாக மேலும் அதிகரித்திருக்கிறது. இது ஒரு பெரிய விஷயம். மிக ஜாக்கிரதையாக ஆராயவேண்டிய விஷயம்!"

இப்படி எழுதுகிருர், ஸ்ரீமன் நாராயண் என்பவர்! இவர் யார் தெரியுமா? காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியப் பொதுக்காரியதரிசி! அ. இ. கா. கமிட்டியின் ஆதரவில் நடைபெறும், 'எகனுமிக்ரிவ்யூ' எனும் ஏட்டில், **அதிகப்படி சுமையை மத்யதர ஏழை மக்கள் தாங்க முடியாது,** என்று எழுதுகிருர்! ஆனுல் நம் காமராஜர் நமக்குப் பதில் சொல்லுவதாக எண்ணிக்கொண்டு, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயற்சிக்கிருர்—அந்த முயற்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரப் படையும் திரட்டி ஊர் ஊராக அனுப்பப்போகிறேன் என்கிருர்!

அந்தப் பிரச்சாரகர்கள் மக்கள் மன்றத்தில் போய், "எங்கள் சர்க்கார் ஏழைகளுக்கு எவ்வித வரியும் போடவில்லை" என்ரு கூற முடியும்? கூறினுல், கெக்கலிப்பர் மக்கள்! காமராஜர் பிரம்மச்சாரி—குடும்பத்தேள் கொட்டாத நிலையிலிருப்பவர் — எது வேண்டுமானுலும் கூறலாம்! வரி செலுத்தும் மக்கள் அறியவா மாட்டார்கள், இந்த அக்கிரம வரிகளைப்பற்றி? வேண்டுமானுல், இப்படிக் கூறலாம், "போட்டிருக்கிற வரி ஒன்றும் அதிகமில்லை. ஒருபிடி அரிசியை நீங்கள் குறைத்துக்கொண்டால் போதும் — வெளியூருக்குப் போக அடிக்கடி ரயிலில் ஏருமல் இருந்தால் போதும் — இரண்டு தீப்பெட்டிக்குப் பதில் ஒன்று வாங்கினுல் போதும் — தேனீருக்குப் பதில் தண்ணீர் குடித்தால் போதும் — இரண்டணுவிலும்

நாலணாவிலும் உழைத்து வந்த நீங்கள் உற்சாகம்பெறச் செல்லுகிறீர்களே அந்தச் சினிமாவுக்குச் செல்லாமலிருந்தால் போதும — இந்த வரிகள் ஒன்றும் பிரமாதமாகத் தெரியாது'' என்று.

குடந்தை காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் ஒருவர் இவ்வண்ணமே பேசியிருக்கிறார்! ஓமலூரில் சொற்பொழிவு ஆற்றிய காமராஜரும், இரத்னச் சுருக்கமாக ஒவ்வொருவரும் தியாகம் செய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்!

நாட்டின் நலனை நாட, வேறு வழிகள் எதுவுமே இல்லையென்றால் இப்படி தேவைகளைக் குறைத்துக் கொள்வதைப்பற்றி மறுப்பில்லை. போர்க்காலத்தின் போது மக்கள், கிடைத்ததைப் பெற்று பல தேவைகளைக்குறைத்துக் கொள்ளவில்லையா? அது போல, வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி, சர்க்காருக்கு வரியைக் கட்டுவர்! ஒருவேளை உண்டவன் இரண்டுவேளை உண்ணவும், ஒரு வேட்டி வைத்திருப்பவன் இரண்டாவது பெறவுமே, நாங்கள் ஆட்சி புரிகிறோம் என்று வாய் வீச்சு வீசி வருவதாகும், இந்தச் சர்க்கார். இப்படி ஏழைகள் அவதிப்படாமலேயே, இந்தப் பணத்தைப் பெறும் வழியே இல்லையா, என்கிற கேள்வி ஒன்று எழத்தானே செய்யும்! அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லும், காங்கிரஸ்!!

இந்த வரிகளைப்போட்டு ஏழை மக்களைச் சுரண்டாமல், வேறு வழிகளில் இந்த 93-கோடியையும் சரிக்கட்டிக்கொள்ளக் கூடாதா? அதற்கான வழிவகைகள் பல உள, என்கின்றனர் பாராளு மன்றத்தில் பேசுவோர்! காங்கிரஸ் பொதுக்காரியதரிசி நாராயணனே எழுதுகிறார்,

"சர்க்காரிலேயே, அதன் சொந்தச் செலவுகள் நியாயமானதாகக் கருத முடியாதிருக்கும்போது, அதிகப்படி வரி கட்டுமாறு மக்களை எப்படிக் கேட்க முடியும்?''

கேட்டீர்களா, கதையை! ஏழை மக்களை, தியாகம் செய்ய அழைக்கிறார் காமராஜர் — அவருடைய கட்சிப் பொதுக்காரியதரிசி கேட்கிறார், "ஏனய்யா! ஆளும் நீங்கள் என்னென்ன அநாவசியச் செலவு செய்கிறீர்கள்? அதைக் குறைத்துக்கொண்டால் என்ன! அதற்குப் பதில் இப்படி வரி போட்டால் என்ன என்று எண்ணுவார்கள் மக்கள்?'' என்று! கேட்பது நாமல்ல; காங்கிரசைக் கட்டிக்காக்கும் பொதுக்காரியதரிசி; தேபருக்கு அடுத்த இடத்திலிருப்பவர்!!

"டில்லியில் காணப்படும் வாழ்த்து வரவேற்புகளும் விருந்துகளும், ரொம்பி வழிந்தோடுவதாக இருக்கின்றன. ரொம்ப விசேஷ சந்தர்ப்பங்கள் தவிர மற்றப்படி இவை யாவும் அநாவசியம். அதிகாரிகளுக்கு வழங்கப்படும், பல்வேறு அலவன்சுகள் உள்பட, பல்வேறு இனங்களிலுள்ள செலவைக் குறைக்கலாம்."

26-ந் தேதிய 'தினமணி' முதல் பக்கத்தில் வந்திருக்கிறது, காங்கிரஸ் பொதுக்காரியதரிசியின், இந்தக் கருத்துரை. நிரம்பி வழிந்தோடுகிறதாம்! கூறுகிறார், காங்கிரஸ் பொதுக் காரியதரிசி. பல செலவினங்களைக் குறைக்கலாம் என்கிறார் — அப்படியெல்லாம் செய்யாமல் புதிய வரிகளைப்போட்டதைக் கண்டிக்கிறார்! ஆனால் காமராஜர், புதிய வரிகளைக் கண்டிப்போரைப் பார்த்து, பொறுப்பில்லாதவர்கள்—திறமுறைகளுக்கள்—என்று ஏசுகிறார்!!

★

என்ன ஆகுமோ!

தமிழுக்கு இடமில்லை!! — என்று கூறும் பண்டாரநாயகாவின் ஆட்சியில், தமது அதிருப்தியைக் காட்ட அறப்போர் துவக்க இருக்கின்றனர், இலங்கை வாழ் தமிழர்கள். தமிழர்தம் கட்சி இதற்கான முயற்சிகளைச் செய்துவருகிறது. பல்வேறு துறைகளிலுமுள்ள, தமிழர்களும், அறப்போருக்குஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்க முன்வந்துள்ளனர். வரப்போகிற ஆகஸ்டில், அகிம்சையை அடிப்படையாகக்கொண்டு இந்த அறப்போர் விளங்கவேண்டும் என்பது இலங்கை வாழ்வோரின் எண்ணமாகும்!!

ஆனால், இதை எதிர்க்க ஒரு லட்சம் தொண்டர்களைத் திரட்டத் துவங்கிவிட்டாராம், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா. அவருடைய லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில், இம் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். இந்த ஒரு லட்சம் தொண்டர்கள், எதற்காகத் தெரியுமா? தமிழர்தம் உரிமைப் போரைச் சமாளிக்கவாம்!!

தமிழர்கள் அன்புநெறியில் தானே, அறப்போர் நடாத்தப் போகிறார்கள், இதைச் சமாளிக்க ஏன் தொண்டர் படை? அறப்போரின் விளைவாக ஒரு வேளை எங்காவது குழப்பம் ஏற்பட்டு விடுகிறதென்றால், அதைச் சமாளிக்க போலீஸ் படையும் உள்ளது! துப்பாக்கிப் பிரயோகம் வரை செய்வதில் 'நம்ம நேரு சர்க்காருக்கு' சளைத்ததுமல்ல அது!!

"தமிழரசுக் கட்சியினர் தொண்டர்படை திரட்டி எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவது நியாயமற்றதென்று அரசாங்கம் கருதும் பட்சத்தில் அந்த "அதர்ம இயக்கத்தை'' நசுக்க அதே மாதிரி இன்னொரு தொண்டர் படையைத் திரட்டுவதும், வகுப்புவாதத் தீயில் நெய் வார்ப்பதைப்போன்ற ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்குவதும் எப்படி விவேகமானதாக இருக்கமுடியும்?'', என்று இலங்கையிலிருந்து வெளியாகும் "வீரகேசரி'' ஏடு, கேட்கிறது. பண்டாவின் இந்த யோசனை, விவேகமற்றதுமட்டுமல்ல, விபரீத எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமோ என்றும் அஞ்சுகிறோம்!!

தமிழ் மொழிக்கும் இடம் கொடுங்கள்—என்பதுதான், இப்போது, தமிழர்தம் கட்சியின் கோரிக்கையாகும். இதற்கு, அங்குள்ள சகல தமிழர்களும் ஒன்றுதிரண்டு நிற்கிறார்கள்!!

நேருவின் புகழொளியைக் கொண்டுவந்து காட்டி அவர்தம் ஆர்வத்துக்குஅணைபோட முயன்றார் பண்டாரநாயகா! அது, பலிக்காததால், இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்!!

இந்த விபரீதப்போக்கு காண வருந்துகிறோம்—ஈவு இரக்கமற்ற முறையில் செல்வது அரசுக்கு நல்லதல்ல — இதைப் பண்டாரநாயகாவுக்கு உணர்த்த யாரிருக்கிறார்கள்! சந்தித்துப் பேசிய நேருவும் சரச உரையாடல்களுடன் திரும்பிவிட்டாரே!! ★

இதோ, இன்னென்று!

ஆசை பிறந்தது சென்னைக்கு! அடித்துத் தள்ளுகிறது, டில்லி!!

ஒரு ஆலையைத் துவங்கி நடத்தலாம் என்கிற ஆசை ஏற்பட்டது, சென்னை சர்க்காருக்கு. அதற்கு நாங்களிருக்கையில் உனக்கென்ன என்று மறுத்து விட்டது, டில்லி.

சேலத்தில் ஏராளமான மாக்னசைட் பொருள் கிடைக்கும் சுரங்கங்கள் இருப்பதும், அதை ஒரு வெள்ளைக்காரக் கம்பெனி ஏற்று நடத்துவதையும் அறிவோம நாம்! அறுபது ஆண்டுகளுக்கு மேலாக, இந்தச் சுரங்கங்களைச் சுரண்டி வருகிறது வெள்ளைக்காரக் கம்பெனி!! ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கரல்ல, 4500 ஏக்கர்கள், இக்கம்பெனியின் வசம் ஒப்படைக்கபபட்டுள்ளன.

இது தவிர, மூன்றே மூன்று வேறு சில கம்பெனிகளும், மாக்னசைட் எடுப்பதில் ஈடுபட்டு வருகினறன—அவை, சிறிய கம்பெனிகள்! இந்தியக் கம்பெனிகள்!! எனினும், இவைகளால், அவ்வளவு பெரிய வெள்ளைக்காரக் கம்பெனியுடன் போட்டியிட முடியவில்லை. யானையை எதிர்க்க பூனையால் முடியுமோ!

இங்கிலையில், அந்த வெள்ளைக்காரக் கம்பெனிக்கு சர்க்கார்கொடுத்திருந்த குத்தகைத்தவணை 1959-ல் முடிகிறது. அதற்குப் பிறகு, சர்க்கார் சம்மதித்தால் தான் அவர்களிருக்கலாம்! சம்மதிக்காவிடில் மூட்டை கட்டிக் கொண்டு வெளியேறவேண்டியது தான்!!

இதைக்கண்ட சென்னை சர்க்காருக்கு ஒரு ஆசை பிறந்தது—4500-ஏக்கர் நிலம்—அங்கே விளையும் மாக்னசைட்—அதை எடுப்பதால் சர்க்காருக்கு வரும் இலாபம் இத்தனையையும் கணக்குப் போட்டுப் பார்த்ததும், ஆசை அதிகமாயிற்று. இந்த ஆசை ஏற்படும்படி அரசுக்கு யோசனை கூறியவர்கள், சேலத்துப் பிரமுகர்கள்! அவர்கள் இலாபத்தையும் வருமானத்தையும் எடுத்துச் சொலலி, இந்தச் சுரங்கங்களை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்றனர்!

அதைக் கண்ட சென்னை அரசும், தனது எஜமானரான டில்லியின் சம்மதம் கிடைக்கும—தாங்களே ஏற்று நடத்தலாம்—தேசியமயமாக்கவேண்டும் தொழிலகளை என்று வற்புறுத்தும் எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் ஒரு படிபபினையாகயிருக்கும என்று கனவு கண்டது. ஆனல், டில்லி என்ன உத்தரவு அனுப்பியது தெரியுமா!

"பிரிட்டிஷ் கம்பெனிக்கு அந்த லைசென்சைக் கொடுக்க வேண்டாம். கல்கத்தாவிலிருக்கும் கம்பெனிக்குக் கொடுங்கள்."

கல்கத்தாவில் இருக்கும் கம்பெனிக்குக் கொடுக்க வேண்டுமாம்! வடநாட்டவரின் ஆதிக்கத்தில் உள்ள கம்பெனி அது என்று தெரிய வருகிறது!

மாக்னசைட் பொருள், எதிர்காலத்தில் மிகமிக உபயோகப் படக்கூடியதாடிம். இரும்பை உருக்கி எஃகாக்கும் ஆலைக்குழாய்களுக்கு இன்றியமையாததாகும்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி மூன்று புதிய எஃகு ஆலைகளை அமைக்கப்போவதால், இப்பொருளுக்கு நல்ல கிராக்கி ஏற்படும்! நல்ல லாபமும் கிடைக்கும்!

டில்லி சம்மதம் அளித்திருந்தால், இந்த லாபம் நமது கஜானுவுக்குத்தான் வரும். எனினும் டில்லி மறுத்துவிட்டது! காரணம் இத்திட்டத்துக்கு 2-கோடி ரூபாய் முதல் தேவையாதலால், சம்மதம் தந்தால், சென்னை நம்மையெங்கே பணம் கேட்குமோ என்கிற பயத்தால் மறுத்திருக்கக்கூடும்!

அப்படி மறுத்ததால், டில்லி மேற்படி தொழிலை நடத்தும்படி, இங்கேயுள்ளவர்களுக்கு, அனுமதி தந்திருக்கலாமல்லவா?

சென்னை, இந்த யோசனையையும் கூறியதாகத் தெரிகிறது! எனினும் டில்லி, கல்கத்தா கம்பெனிக்கு, அனுமதி அளிக்குமாறு கட்டளை பிறப்பித்துள்ளது!

இந்தக் கட்டளைக்கு சென்னை, இன்னும் பதில் அனுப்பவில்லையாம்—ஆகவே, வாய்ப்பு இன்னும் போகவில்லை என்று தெரிகிறது. காமராஜர், கண்டிப்பாக இருந்து, டில்லியை வற்புறுத்தினுல், நம்முடைய தொழில் ஒன்று இயங்க இயலும். செய்யுமா, சென்னை என்பதைப்பொறுத்துப் பார்ப்போம்!! ★

விற்பனைக்குத் தயார்

'முரசொலி' மாறன் M. A. எழுதிய

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

விலை ரூ. 2—8—0

சி. என். அண்ணுதுரை,
நாவலர் நெடுஞ்செழியன் M. A.
இவர்களின் மதிப்புரையுடன்

★

பி. சி. கணேசன் பி. எஸ். சி; பி. டி.
எழுதிய

'அபிசீனிய அடிமை'

விலை ரூ. 1—0—0

கலைஞர் மு. கருணுநிதி
அவர்களின் மதிப்புரையுடன்

★

கலைஞர் மு. கருணுநிதி அவர்களின்

மணி மகுடம்

(நாடகம்)

விலை ரூ. 1—8—0

★

பி. சி. கணேசன் பி. எஸ். பி. டி.
அவர்களின்

எழுத்தாளன் காதலி

நாடகம் (அச்சில்)

தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக விலையோடு அஞ்சல் செலவுக்கான 25-புதிய காசு சேர்த்து அனுப்புக. வியாபாரிகட்கு 25% கழிவு தரப் படும்.

முத்துவேல் பதிப்பகம்

77. மதுரை சாலை, திருச்சி-8.

இரவல் வாழ்க்கை

—[மலர்மன்னன்]—

"இத்தாலிய மக்கள் தாங்கள் உண்ணுகின்ற ரொட்டியுடன் ஆஸ்திரியாவையும் கலந்து உண்டார்கள்" என்று, தங்களை ஆட்டிப்படைத்த ஆஸ்திரியர்களின் வாழ்க்கை முறைகளை இத்தாலியர்கள் எவ்வாறு அளவுக்கு மீறிக் கடைப்பிடித்தார்கள் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறன், ஜியூசெப்பே ஜியூட்டி என்ற இத்தாலியக் கவிஞன்.

எந்த ஒரு இனம் மற்றொரு இனத்திற்கு அடிமைப்பட்டு விடுகிறதோ, அந்த இனத்தின் வாழ்க்கை அடிமைப்படுத்திய இனத்தினது வாழ்க்கை முறைகளின் மறுபதிப்பாகி விடுகிறது! அடிமைப்படும் வரை தனி வழியில் நடைபெற்றுவந்த அதன் எண்ணப்போக்கு பழக்கவழக்கம், அரசியற் கண்ணோட்டம், சட்ட திட்டங்கள் ஆகிய அனைத்தும் மறைந்து அடிமைப் படுத்திய இனத்தின் வழிவகைகளும், கொள்கைகளும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களும், தீட்டப் பெற்ற ஓவியங்களும் அந்தந்தக் காலத்து ஆளுகை இனத்தின் நாகரீகத்தை யொட்டியிருப்பதைக் காண்கிறோம்.

இறுதியாக இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆங்கில ஆட்சிக்குட்பட்டதும்ஆங்கிலேயர் போல் உடுப்பதும் ஆங்கிலம் கலந்து பேசுவதும் நாகரீகமாக எண்ணப்பட்டது. இவ்வாறு அடிமைப்படும் வரை தனி வழியில் நடைபெற்றுக்கொண்டு வந்த இனம் அடிமைப்பட்ட பிறகு, ஆளும் இனத்தின் பழக்கவழக்கம் அரசியற் கண்ணோட்டம் முதலியவற்றை 'இவைதான் சிறந்தவை போலும்' என்ற மயக்கத்துடன் ஏற்றுக்கொண்டு விடுகிறது. இதனைத்தான், பரிதாபமும், பச்சாதாபமும் கலந்த ஏளனத்துடன்,'இரவல் வாழ்க்கை' என்று விளிப்பார்கள்.

ஆளும் இனத்தாரைப்போலவே அடிமைப்பட்ட இனத்தார் தங்களை மாற்றியமைத்துக்கொண்டு, அதிலே இன்பமுறும் வெட்கக் கேட்டைக் கண்கூடாகக் கண்டவன், மேதை மாஜினி.

"எங்கே சுதந்திரம் இல்லையோ, அங்கே மனித வாழ்க்கை ஐம்பொறிகளைக் கொண்ட — முடுக்கிவிட்டால் வேலை செய்யும்—இயந்திரம் போல் ஆகிவிடுகிறது" என்று, தம் பண்பாட்டை அறவே மறந்து, ஆதிக்கம் செய்வோர் தம் நாகரீகத்தைப் பின்பற்றுவதே பெருமைக்குரியது என்று கருதி யலைந்து தன் நாட்டவரைக் கண்டு மனமுடைந்து அரற்றுகிறன், அவன்.

தமக்கெனத் தனிப் பண்பாடிருக்க அயலவரின்—ஆள்வோரின் —பண்பாட்டைத் தமதாக்கிக் கொள்வது அருவருப்பும் அவமானமுண்டாக்குவதுமாகும் என்பதை அடிமைப்பட்டவர்கள் அறிவதில்லை. இரவல் வாழ்க்கையினை நடத்துவதையே மிகச் சிறந்த இன்பமாக அவர்கள் கருதுகிறார்கள். இந்த மக்களை மயக்கத்தினின்று தெளியவைத்து, மறந்து போன பழம் பெருமையை மீண்டும் நினைவிற்குக் கொண்டுவருவதென்பது மிகமிகத் தொல்லையான செயலாகும்.

"சமுதாய ஒப்பந்தத்தை" வழங்கிய சிந்தனையாளன் ரூஸோ தனது நாகரீகத்தை மறந்து, பராதீன வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் ஒருவனது நிலைபற்றிப் பினவருமாறு கூறுகிறன்:

'ஒரு மனிதன் தன் சுதந்திரத்தைத் துறந்துவிட்டான் என்றால், அவன் தனது மனிதத் தன்மையை இழந்துவிட்டானென்றுதான் பொருள். அதுமட்டுமல்ல, மனித இனத்தின் ஒரு அம்சத்தினன் என்கின்ற முறையில் அவனுக்கு ஏற்பட்டுள்ள உரிமைகளை, கடமைகளை, நெறிகளை எல்லாவற்றையும் துறந்தவனாவான்.'

இந்த அவல நிலையைத்தான், இன்றைய திருவிடத்து மக்கள் அடைந்து வருகின்றார்கள். வெள்ளையரின் வெளியேற்றத்திற்குப் பிறகு வடவரது நடையுடை பாவனைகளைப் பின்பற்றுவதில் பற்றும் பாசமும் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். வடவரைப்போல் தோற்றமளிப்பதை சீரிய நாகரீகமாக எண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். இதனை நன்குணர்ந்துகொண்ட வடவர்கள் தென்னகத்தில் இந்தி மொழியினைப் பலப் பல விதங்களிலேயும் மிகவும் மும்முரமாகப் பரப்பி வருவதைப் பார்க்கிறோம். இந்த நிலை நீடிக்குமேயானால், வெகு விரைவில் தென்னவர் தமது பேச்சினூடே தற்போது ஆங்கிலத்தைக் கலந்து கலந்து உபயோகிப்பதைப்போல் இந்திச் சொற்களைக் கலந்து பேசத் தொடங்குவர். கற்றதாகக் காட்டிக்கொள்ளும் வட்டாரம் இன்று ஆங்கிலத்தில் உரையாடுகிறது. நாளை இந்தியில் உரையாடத் துவங்கும்.

இத்தகைய பயங்கர நிலையிலிருந்து தென்னாட்டை விடுவிக்கும் மகத்தான பொறுப்பை மக்களது இயக்கமான திராவிட முன்னேற்றக்கழகம் ஏற்றுக்கொண்டிருப்பதை அறியும்போது அதன்பால் அறிஞர் வட்டாரத்திற்கு நம்பிக்கையும், பெருமதிப்பும் ஏற்படுவதில் வியப்பென்ன?

★

திருமணம்

தோழர் துரை. நாராயணசாமி, தோழியர் தாட்சாயணி திருமண விழாவினை சென்னையில் 19—5—57 அன்று புலவர் தணிகை உலகநாதர் நடத்திவைத்தார்.